பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 27 செவ்வாய்க்கிழமை 09.02.2021 கதிர் 96

### இது ரகசியம் அல்ல!

'பொத்துவில் முதல் பொலி கண்டி வரை'யான பேரெழுச்சிப் பயணம் தொடர்பில் வடக்கு, கிழக்கில் பெரும் அரசியல் கிளர்ச்சி – புரட்சி – ஒன்று ஏற்பட்டிருப்பதாகவே பல தமிழ் ஊடகங்களும் சித்திரிக்கின்றன. ஆனால் உண்மையில் பக்கம்02

# யாழில் முதலாவது கொரோனாச் சாவு!

## ஊர்காவற்றுறையைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணே இலக்கு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப். 09

**கொரோனா வைரஸ் தொற்று நோயால் யாழ்ப்பாணத்தில் முதலாவது மரணம் பதிவாகியுள்ளது. ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த 76 வயதுடைய வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.**



கொழும்புதனியார்வைத்தியசாலையில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குறித்த பெண், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கடந்த மாதம் மாற்றப்பட்டார்.

அவருக்குக் 2

## நேற்றும் 887 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் நேற்றும் 887 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் 2

## இலங்கை நாடாளுமன்றில் இம்ரான் கான் விசேட உரை



இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இலங்கை நாடாளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார் என்று 'தஹிந்து' செய்தி வெளி 2

## மேலும் 9 பேர் மரணம் கொரோனா காவு 365

இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 9 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரசதகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு – 15 ஐச் சேர்ந்த 95 வயதான ஆண் ஒருவர், அநுராதபுரத்தைச் சேர்ந்த 61 வயதான பெண் ஒருவர், குருநாகல் பகுதியைச் சேர்ந்த 50 வயதான ஆண் ஒருவர், நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 70 வயதான ஆண் ஒருவர், கொழும்பு 12 ஐச் சேர்ந்த 45 வயதானபெண்ஒருவர், யாழ். ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த 76 வயதான பெண் ஒருவர், ஹொரணைப் பகுதியைச் சேர்ந்த 61 வயதான ஆண் ஒருவர், குருதெனியப் பகுதியைச் சேர்ந்த 42 வயதான ஆண் ஒருவர், மாவனெல்ல பகுதியைச் சேர்ந்த 73 வயதான ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். 2

நீதிக்கான பேரணி வெற்றியின் எதிரொலி

## சுமந்திரன் எம்.பிக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வாபஸ்



தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்தவிசேடஅதிரடிப் படை திடீரென மீளப்பெறப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு உயர் அதிகாரிகளிடமிருந்துகிடைத்த உத்தரவுக்கமைய அவரின் அதிரடிப் படை பாதுகாப்பு வாபஸ்பெறப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படையின்பாதுகாப்பு நீக்கப்பட்டமைக்கான காரணம்அறிவிக்கப்படவில்லை என்று நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 2

## கிடைத்தது ஆயிரம் ரூபா நாள் சம்பளம் தொழிலாளர் போராட்டத்துக்கு வெற்றி

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்படி அடிப்படை நாள் சம்பளமாக 900 ரூபாவும், மேலதிக கொடுப்பனவாக 100 ரூபாவும் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொழிற்சங்கங்களுக்கும், முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையே நடைபெற்ற கூட்டு ஒப்பந்தப் பேச்சு இணக் 2





## ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 762 பேருக்கு இதுவரை கொரோனாத் தடுப்பூசி ஏற்றல்

இலங்கையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் நேற்று வரைஒருஇலட்சத்து67ஆயிரத்து 762 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசிஏற்றப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவால் இலங்கைக்கு 5 இலட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இவற்றை 2 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்குச் செலுத்த முடியும்.

அந்தவகையில் முதற்கட்டமாக கொரோனா ஒழிப்புப் பணியில் முன்களப் பணியாளர்களாகச் செயற்படும் சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினருக்குக் கொரோனாத் தடுப்பூசி கடந்த 29ஆம் திகதி முதல் ஏற்றப்பட்டு




வருகின்றது.

இதன்படி 29ஆம் திகதி 5 ஆயிரத்து 286 முன்களப் பணியாளர்களுக்கும், 30ஆம் திகதி 32 ஆயிரத்து 539 2

## அரசுக்கு இ.தொ.கா. நன்றி!



பெருந்தோட்டத் தொழிலாளர்களின்ஊதியஉரிமைப்போராட்டம் வெற்றியளிக்க முழு ஒத்துழைப்பையும் வழங்கிய அரசுக்கு, அதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று நேரில் சந்தித்து நன்றியைத் தெரிவித்துக்கொண்டது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்.

பெருந்தோட்டத் 2

## பேரணியில் பங்கேற்ற பிரமுகர்களுக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

### விசாரணை ஜூன் 17ஆம் திகதி வரை ஒத்திவைப்பு

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையில் முன்னெடுக்கப்பட்ட நீதிக்கான போராட்டத்தில் பங்கேற்ற பிரமுகர்களுக்கு எதிராக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் நிலையங்களால் 'பி' அறிக்கையின் அடிப்படையில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், சமூகப் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் எனப் பலருக்கு எதிராக குறித்த மனுக்கள் நேற்று தாக்கல் செய்யப்பட்டன.

போராட்டத்துக்கு முன்பாகத் தடை உத்தரவு கோரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மீளப் பெறப்பட்டே புதிய வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்தநிலையில், குறித்தவழக்குகள் மீதான விசாரணையை எதிர்வரும் ஜூன் மாதம் 17ஆம் திகதிவரையில்நீதிவான்லெனின் குமார் ஒத்திவைத்தார்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனக்கு அப்படிப்படவில்லை.

2002 இல் ஏ9 பாதை திறப்பை ஒட்டி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து புலிகளையும் அழைத்துக் கொண்டு முகமாலையூடாக வந்த மக்கள் கூட்டத்தை குடாநாட்டு மக்கள் வரவேற்ற பவனியிலிருந்து, பொங்கு தமிழ் எழுச்சி வரை பலவற்றை நான் பார்த்திருக்கிறேன் – சுதுமலைக் கூட்டம் உட்பட.

இப்போது வடக்கில் ஏற்பட்டிருக்கும் – வெளிப்பட்டிருக்கும் – கிளர்வு, பேரெழுச்சியாக என்னவோ என் மனதில் படவில்லை. கிழக்கில் ஏற்பட்ட எழுச்சியின் பிரதிபலிப்பு மட்டுமே இது. வெறும் கூட்டத்தை வைத்து மக்கள் கிளர்ச்சியை எடை போட முடியாது. போடக் கூடாது.

மக்களின் மன எழுச்சியில் – அரசியல் தலைமைகளின் திடசங்கற்பத்திலும் பற்றுறுதியிலும் – ஏதேனும் பெரிய மாற்றம் வந்திருக்கின்றதா என்பதை நாம் தேட வேண்டும்.

ஆனால் கடந்த பொதுத் தேர்தலில், பிள்ளையானுக்கும், வியாழேந்திரனுக்கும், கருணாவுக்கும் அள்ளிக் குவித்த – சம்பந்தனை அரும்பொட்டில் மட்டுமே வெல்ல வைத்த – கிழக்குத் தமிழ் மக்களின் மனதில் ஒரு பெரிய மாற்றம் – எழுச்சி – ஏற்பட்டிருப்பதாகவே எனக்குப் படுகின்றது.

முஸ்லிம்களின் போக்கில் அதிருப்தியும், விசனமுமுற்றிருந்த தமிழ் மக்கள், முஸ்லிம்களுடன் இயைந்து, இசைந்து போக விரும்பும் கூட்டமைப்பைப் புறக்கணித்து கருணா, பிள்ளையான் போன்ற முஸ்லிம் எதிர்ப்புத் தமிழ் தலைமைகளுக்குப் பின்னால் அணிதிரளத் தயாரானமையையே கடந்த பொதுத் தேர்தலில் கண்டோம்.

ஆனால் இப்போது நிலைமையில் மாற்றம். இதுவரை தமிழ்க் கூட்டமைப்பு நீட்டிய அரசியல் நேசக்கரத்தை தனிப்பட்ட பதவி ஆசைகளுக்காக உதாசீனப்படுத்தி, அரசியல் சுயநல நோக்கில் செயற்பட்ட முஸ்லிம் தலைவர்கள் இப்போது நன்கு பட்டுத் தெளிந்து விட்டனர். தமிழர்கள் தரப்பின் உண்மை உணர்வை மதித்து அவர்களோடு இசைந்து போவதே தமக்குள்ள ஒரே மார்க்கம் என்பதை முஸ்லிம் தலைமைகள் புரிந்து தம்மை மாற்றிக்கொள்ள முயல்கின்றமையால் கூட்டமைப்பின் நிலைப்பாடும், ஆதரவும் பெருகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் களநிலைவரத்தை நன்கு புரிந்துகொண்டு தன்னை முழுமையாக மாற்றியமைக்க கூட்டமைப்பின் – குறிப்பாக தமிழரசின் – கிழக்குத் தலைமை, அதுவும் விசேடமாக மட்டக்களப்பு, அம்பாறை தமிழரசுத் தளம் இணங்கித் தயாராகும் தாராளத்துக்கு முன்வந்திருக்கின்றது.

வடக்கில் தமிழரசுத் தலைமைக்குள் குத்துவெட்டு, வாரிசு அரசியலுக்கு முன்னுரிமை, மக்கள் செல்வாக்கைப் பெற்றவர்களை திட்டமிட்டு சதி வலை பின்னி ஒதுக்குதல், வயோதிபர் குழாமின் ஆக்கிரமிப்பு என இன்னோரன்ன காரணங்களினால் வடக்கு தமிழரசு சேடம் இழுக்கும் நிலையிலிருந்து மீளப் போவதாகத் தெரியவில்லை. கிளிநொச்சியில் கொடுக்கப்படும் ஒட்சிசன் மட்டும் அது பிழைத்து, எழுச்சி பெறப் போதுமானதல்ல என்பது தான் என் கருத்து. தலைமை மாற்றம் சாத்தியமாகாத வரை வடக்கில், என்ன எழுச்சிப் பேரணி, கிளர்ச்சிப் போராட்டங்கள், புரட்சி ஆர்ப்பாட்டங்கள் நடத்தினாலும் தளர்ந்து செல்லும் தமிழரசு நிமிரும் வாய்ப்பு அண்மைக் காலத்தில் வரும் என்று எனக்குத் தோன்றவில்லை. கால ஓட்டத்தில் குருவிச்சைகள் கழன்றால் சில சமயங்களில் தமிழரசு துளிர் விட்டுத் தழைக்கலாம்.

ஆனால் கிழக்கில் நிலைமை அப்படியல்ல. புதிய இளம் தலைமுறைகள் துடிப்புடன் முன்வருகின்றன. மூத்தவர்கள் அவருக்கு இடமளிக்கின்றார்கள்.

இந்தப் பொத்துவில் முதல் பொலிகண்டி எழுச்சிப் பயணத்தின் ஆரம்ப நெருக்கடியின் போது அதை முன் நகர்த்துவதற்காக தாக்குதலை எதிர்கொண்ட முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசனில் இருந்து செல்வராசா வரை மூத்த தலைவர்கள் எல்லோரும் புதிய – துடிப்பான – எழுச்சி மிக்க – அரசியல் தலைமைகளை அரவணைத்து வரவேற்கின்றனர். முன்னிலைப்படுத்துகின்றனர். அதனால் அங்கு தமிழரசுக்கு மீளெழுச்சி சாத்தியம் என்று தோன்றுகின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திரக் சட்சியின் இளைஞரணியில் இருந்தவர்தான் சாணக்கியன். இன்று கிழக்கில் தமிழரசின் விடிவெள்ளியாகத் துணிச்சலுடன் எழுச்சி பெற்றிருக்கின்றார். பரம்பரையாகத் தமிழரசில் உரிமை கொண்டவர். அவரின் பேரனார் இராசமாணிக்கம் தமிழரசு ஸ்தாபகர்களுள் ஒருவர். முன்னாள் தமிழரசுக் கட்சித் தலைவர்.

அந்த வரிசையில் இன்னொருவர் – சாணக்கியன் போன்று மறுபக்கத்தில் இருந்தவர் – தமிழரசில் இணையும் சூழல் ஏற்பட்டது. அவரும் கூட சாணக்கியன் மாதிரி ராஜபக்ஷக்களுடன் நெருங்கிப் பழகியவர்தாம். அதனால்தான் ராஜபக்ஷக்களின் உண்மை முகம் அறிந்து, அங்கிருந்து வெளியேறி தமிழ்த்தேசியப் பக்கம் வரத் திட்டமாகத் தீர்மானித்துச் செயற்படுகின்றார். தற்போதைய பேரணியின் ஆரம்பத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்துவது தொடர்பில் சரளமாக அவர் தெரிவித்த கருத்துக்கள் தமிழ்த் தேசியத்தின் பாலான அவரின் உறுதியை வெளிப்படுத்தின. அவர் வேறுயாருமல்லர். அருண் தம்பிமுத்துதான் அவர். முன்னாள் தமிழரசுத் தூண்களில் ஒருவரான சாம் தம்பிமுத்துவின் மகன். கடந்த பொதுத் தேர்தலில் கூட ஆனந்தசங்கரியின் தமிழர் விடுத்லைக் கூட்டணி சார்பில் களத்தில் இறங்கி கஜேந்திரகுமாரின் கூட்டணியை விடவும் – விக்னேஸ்வரனின் கூட்டணியை விடவும் – அதிக வாக்குகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் பெற்றவர். சங்கரியின் கட்சிக்கு அங்கு எண்ணாயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் விழுந்தமைக்குக் காரணம் இவர்தான்.

சாணக்கியன் போல இவரையும் – இளமையும் துடிப்பும் மிக்க இவரையும் – தமிழரசுக்குக் கூட்டி வருபவர் சுமந்திரன்தான்.

ஏற்கனவே தமிழரசு சார்பில் அரியநேந்திரன், இளைஞரான சேயோன் போன்றவர்கள் எல்லோரும் தமிழரசை துடிப்புடன் இயக்கத் தயாராகி வருகின்றார்கள்.

புது – இளம் – இரத்தங்களுடன் தமிழரசுக் கட்சி கிழக்கில் எழுச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் தென்படுகின்றன.

துடிப்புள்ள – அரிப்பணிப்புமிக்க – இளைஞர்களைப் புறமொதுக்கி, செம்புகாவிகளுக்கு மட்டும் இடம் கொடுக்கும் வயோதிபர்மடமான வடக்கு தமிழரசுக்கு இப்போதைக்கு மீட்சிக்கோ, உயர்ச்சிக்கோ வாய்ப்பிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

– மின்னல் –

## யாழில் முதலாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனாத் தொற்று கண்டறியபட்ட நிலையில், அநுராதபுரம் சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டார்.

எனினும், அவரது உடல்நிலை கடுமையானதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் மீளவும் மாற்றப்பட்டார். அவர் தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்..

இந்தநிலையில், அவர் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார்.

அவரது சடலம் கொரோனாச் சுகாதாரக் கட்டுப்பாடுகளுக்கு அமைய நேற்று தகனம் செய்யப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் நான்காவது கொரோனா மரணம் இதுவாகும். ஏற்கனவே வவுனியாவில் ஒருவரும், மன்னாரில் இருவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் முதலாவது நோயாளி நேற்று உயிரிழந்துள்ளார்.

## மேலும் 9பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி, இலங்கையில் கொரோ னாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 365 ஆக அதிகரித்துள்ளது.

## கிடைத்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கப்பாட்டுக்கு வராததால் இந்த விவகாரத்தை சம்பள நிர்ணய சபைக்குக் கொண்டு செல்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி சம்பள நிர்ணய சபை நேற்று கூடியது. தொழிற்சங்கங்கள், கம்பனிகள் மற்றும் அரச தரப்பு பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது அடிப்படை நாள் சம்பளமாக 900 ரூபாவும், மேலதிக கொடுப்பனவாக 100 ரூபாவும் வழங்கப்பட வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கு ஆதரவாக 11 பேர் வாக்களித்தனர். தொழிற்சங்க தரப்பில் இருந்து 8 பேரும், அரச தரப்பில் இருந்து மூவரும் வாக்களித்தனர். இதன்படி திட்டம் நிறைவேறியுள்ளது.

தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றால் நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா கிடைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கான அறவீட்டின்போது குறித்த ஆயிரம் ரூபாவே கருத்தில் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் நடைபெற்ற நீதிக்கான பேரணியிலும், பேரணியின் நிறைவில் வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப் புக்களால் வெளியிடப்பட்ட கூட்டுப் பிரகடனத்திலும் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொழிலாளர் களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாவும், மேலதிக கொடுப்பனவாக 100 ரூபாவும் என நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா வழங்கும் யோசனை சம்பள நிர்ணய சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு அரச தரப்பில் இருந்து ஆதரவாக மூன்று வாக்குகள் கிடைக்கப் பெற்றன. இதற்கும் பிரதமருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் உபதலைவரும் பிரதமரின் பெருந்தோட்ட இணைப்பாளருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் நிதிச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ராமேஷ்வரன் ஆகியோரே பிரதமரை நேற்று மாலை சந்தித்து, மக்களின் சார்பில் நன்றயைச் சமர்ப்பித்தனர்.

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்த எண்ணிக்கை 70 ஆயிரத்து 235 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் மேலும் 740 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 64 ஆயிரத்து 141 பேர் குணமடைந்துள்ளதுடன் 5 ஆயிரத்து 729 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## ஒரு இலட்சத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேருக்கும், 31ஆம் திகதி 21 ஆயிரத்து 329 பேருக்கும், பெப்ரவரி முதலாம் திகதி 36 ஆயிரத்து 396 பேருக்கும், 2ஆம் திகதி 23 ஆயிரத்து 217 பேருக்கும், 3ஆம் திகதி 21 ஆயிரத்து 147 பேருக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

அத்துடன், 4ஆம் திகதி 6 ஆயிரத்து 413 பேருக்கும், 5ஆம் திகதி 9 ஆயிரத்து 983 பேருக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

6ஆம் திகதி 3 ஆயிரத்து 838 பேருக்கும், 7ஆம் திகதி 1,625 பேருக்கும், நேற்று 5 ஆயிரத்து 989 பேருக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யிட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற கட்சித் தலை வர்கள் கூட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இந்த விடயத்தை உறுதிப்படுத்திக் கூறினார் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், 'த ஹிந்து' நாளிதழுக்குத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், எதிர்வரும் 22ஆம் திகதி இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரையும் அவர் சந்தித்து, இரு தரப்புப் பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவ ஆரம்பித்த கடந்த ஓராண்டு காலப் பகுதிக்குள், நாட்டுக்கு வருகை தரும் முதலாவது வெளிநாட்டு அரச தலைவராக இம்ரான் கான் வரலாற்றில் இடம்பிடிக்கின்றார்.

இலங்கை, பாகிஸ்தானுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வரும் அதேவேளை, இந்திய – பாகிஸ்தான் அமைதியின்மை குறித்து, கருத்துக்களை வெளியிடுவதிலிருந்து இலங்கை விலகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான தமிழ்பேசும் சமூகத்தின் நீதிக்கான பேரணி பல்வேறு தடைகளைத் தாண்டி நேற்றுமுன்தினம் மாலை பொலிகண்டியில் வெற்றியுடன் நிறைவடைந்தது. இந்தப் பேரணியின் ஆரம்பத்தில் இருந்து நிறைவு வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், த.கலையரசன் ஆகியோர் முன்னின்று செயற்பட்டனர்.

இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப் படை நேற்றிரவு திடீரென மீளப்பெறப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படையினருடன் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் பங்கேற்றமை உள்ளிட்ட சில நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கு அவரின் பாதுகாப்பு மீளப்பெற்றுள்ளது எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

எனினும், பிரமுகர் பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் சுமந்திரனுக்குப் பாதுகாப்புக் கடமையில் இருப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

HOUSE FOR RENT
Address:
Temple Road, Jaffna.
Contact:-0779791957

பாக்கு, கமுக மட்டை தேவை
குடில் உற்பத்திகள் நிறுவனமானது பாக்கு, கமுக மட்டைகளை மொத்தமாக கொள்வனவு செய்கிறது. கமுகு மட்டைகள் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
குறிப்பு:- உடனடியாக பணம் கொடுத்து வாங்கப்படும்.
தொடர்புகளுக்கு 076 011 7002

பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை
நாவற்குழியில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு 076 740 3814

தேவை
பனங்கிழங்கு மொத்த கொள்வனவுக்கு தேவை.
தொடர்புகளுக்கு - 0760117002

# விமலுக்கு அதிகாரம் கிடையாது அவர் மன்னிப்புக் கோரவேண்டும்!



## வலியுறுத்துகிறது பெரமுன

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட வேண்டும் என விமல் வீரவன்ஸ, தெரிவித்த கருத்து தொடர்பாக மன்னிப்பு கோர வேண்டுமென அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், பொதுஜன பெரமுன தொடர்பாக எவ்விதமான தீர்மானங்களையும் மேற்கொள்ளும் உரிமை விமல் வீரவன்ஸவிற்கு இல்லை என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அவருடைய அறிவிப்பு தொடர்பாகப் பொதுமக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்பதுடன் அந்த கருத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கூறியுள்ளார்.

மேலும் கூட்டணியில் இணைந்துகொண்ட ஒருவர் மிக கீழ்த்தரமான அறிவிப்பொன்றை விடுத்துள்ளமை தொடர்பாகக் கட்சி என்ற வகையில் கவலையடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பதவியில் இருந்து நீக்கி அவருக்கு பதிலாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமிக்கப்பட வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் தொற்றாளர் 207 ஆக அதிகரிப்பு!

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேலும் 11 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 207 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.விநோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெப்ரவரி மாதம் வரை 190 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 150 கொரோனாத் தொற்றாளர்கள் சமூகத்திலும், 40 தொற்றாளர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் நகர பகுதியில் தற்போது கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகின்றது. எனினும் முசலி பிரதேசத்தில் தொற்றாளர்கள் அதிக அளவில் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்படுபவர்களின் குடும்ப உறவுகள் அதிகமானோர் தொற்றுடன் அடையாளம் காணப்படுகின்றனர்.

இது சமூகத்தில் வைரஸின் அளவு அதிகரித்து செல்வதற்கு ஓர் அறிகுறியாக உள்ளது. எனவே, பொது மக்கள் இந்த நிலமையைக் கருத்தில் கொண்டு மிகவும் அவதானத்தோடும், விழிப்புணர்வுடனும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நோயாளர்கள் மற்றும் வயோதிபர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்படுகின்ற பட்சத்தில் அவர்களுக்கு மரணம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 8 ஆயிரத்து 962 பி.சி.ஆர். பரிசோதனைகள் சமூகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெப்ரவரி மாதம் 334 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், சுகாதார சேவையில் கடமையாற்றுகின்ற 91 சத வீதத்துக்கும் அதிகமான உத்தியோகத்தர்களுக்கு மன்னார் மாவட்டத்தில் முதலாவது கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கான 2 ஆவது தடுப்பூசி 4 வாரங்களின் பின்னர் மீண்டும் செலுத்தப்பட உள்ளது.

மேலும், நேற்று திங்கட்கிழமை மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுகின்ற 70 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

# ரயிலின் முன் பாய்ந்து இளைஞன் தற்கொலை!

கொழும்பிலிருந்து பதுளைக்கு பயணித்துக் கொண்டிருந்த இரவு தபால் ரயிலின் முன் பாய்ந்து இளைஞனொருவன் தற்கொலை செய்துகொண்டுள்ள சம்பவம் தியத்தலாவையை அண்மித்த ரயில் பாதையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

வெலிமடையைச் சேர்ந்த 21 வயது நிரம்பிய இளைஞன் ஒருவனே, இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சடலம் தற்போது, தியத்தலாவை அரசினர் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து, தியத்தலாவைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலை ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி வழங்க நடவடிக்கை!



பாடசாலை ஆசிரியர்களுக்கு கொவிட் தடுப்பூசியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார பிரிவிடம் கலந்துரையாடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

இந்தத் தடுப்பூசியை ஆசிரியர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என நான் பரிந்துரைத்துள்ளேன்.

காரணம் என்னவென்றால் ஆசிரியர்கள் அவதான நிலையில் உள்ளனர். பலருடன் நாளாந்தம் பழகுகின்றனர்.

இதன் காரணமாக ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பை வழங்குவது நமது கடமையாகும். எனது கருத்தை நான் முன்வைத்துள்ளேன்.

லலித் வீரதுங்கவிடம் இது தொடர்பில் பேசியுள்ளேன். ஆசிரியர்களுக்கும் இதனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

பெப்ரவரி மாதத்தின் இறுதியில் அல்லது மார்ச் மாத ஆரம்பத்தில் ஆசிரியர்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் எனக்கு கூறியுள்ளார். – என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# 20 ஆயிரம் கோடிக்கும் அதிகதொகை மதுபானத்துக்கு செலவிட்டனர் மக்கள்!

## *2020 ஆம் ஆண்டில் மட்டும்*

2020 ஆம் ஆண்டு மது பாவனைக்காக 20 ஆயிரம் கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகையை இலங்கை மக்கள் செலவிட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுபானத்துக்காக 60 வீதம் வரி விதிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த வரித் தொகை பின்னர் நீக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மது பாவனையாளர்கள், மது பான கொள்வனவிற்காக மேலதிகமாக 40 வீதமான பணத்தை செலவிட்டுள்ளர் எனத் தெரியவந்துள்ளது.

இதன்படி, உரிய முறையில் கணிப்பிடும் பட்சத்தில், 2020 ஆம் ஆண்டு மதுபாவனையாளர்கள், மது பானங்களை கொள்வனவு செய்வதற்காக 20 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிக தொகையை செலவிட்டுள்ளனர்.

2020 ஆம் ஆண்டு மது வரித் திணைக்களத்திற்கு 12 ஆயிரம் கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

உற்பத்தி வரி உள்ளிட்ட பல்வேறு வகையிலான வரி, இந்த வரி வருமானத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டு மது பாவனையாளர்களால் மது பயன்படுத்தப்பட்ட சரியான தொகையைக் கணிப்பிட முடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அம்பாறையில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தொற்று!

*அம்பாறை, பஹலலந்த முகாமில் 35 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என கொவிட் - 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.*

# பாடசாலைக்கு அதிபரை நியமிக்க கோரி சமூகத்தினரால் போராட்டம்!





கிளிநொச்சி, யூனியன் குளம் பாடசாலைக்கான அதிபரை நியமிக்கக் கோரி பாடசாலை நுழைவாயிலை மூடி கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பெற்றோர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களால் நேற்று (திங்கட்கிழமை) காலை பாடசாலை நுழைவாயிலை மூடி கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட மிகவும் பின்தங்கிய கிராமத்தில் அமைந்துள்ள யூனியன் குளம் பாடசாலைக்கு கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக நிரந்தர அதிபர் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால், மாணவர்களின் கல்வி முதற்கொண்டு பாடசாலை அபிவிருத்தி சார்ந்த விடயங்களிலும் பின்தங்கிக் காணப்படுவதாக பெற்றோரால் பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டும், கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பட்டபோதும் இதுவரை இந்தப் பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி தற்காலிகமாக அதிபர் ஒருவரை நியமிப்பதாக உறுதியளித்தமையைத் தொடர்ந்து போராட்டம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## கோட்டா அரசின் அற்பத்தனம்

**தமிழர்களின் தேசிய உணர்வெழுச்சியை வெளிப்படுத்திய 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை'யான பயணத்தைக் கண்டு சிங்கள, பௌத்த பேரினவாத அரசு மலைத்துப் போயிருக்கின்றது. தங்களை பௌத்த, சிங்களத் தலைவர்கள் என்று பீற்றிக் கொள்வோர் பெரும் குழப்பமடைந்துள்ளனர்.**

**அதன் வெளிப்பாடே அத்தகைய எழுச்சிக்கு வித்திட்ட இரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு விலக்கலாகும்.**

**நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என்ற உண்மை நிலைமையின் அடிப்படையில் அவருக்கு விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வந்தது. அது, மேற்படி எழுச்சிப் பயணம் நேற்று முன்தினம் இறுதிக் கட்டத்தை – பொலிகண்டியை – அடைந்த போது அதிரடியாக விலக்கப்பட்டது.**

**சுமந்திரன் எம்.பிக்கும் சாணக்கியன் எம்.பிக்கும் வழங்கப்பட்ட அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவு பாதுகாவலர்கள் இருவரின் பாதுகாப்பையும் கூட விலக்குவதற்கான உத்தரவுகள் வந்து கொண்டிருக்கின்றன எனவும் தெரிகின்றது.**

**தமிழர்களின் இந்தத் தேசிய எழுச்சிப் பேரணியை ஒழுங்குபடுத்தியமைக்கான – முன்னின்று நடத்தியமைக்கான – வெகுமானம்தான் இந்தப் பாதுகாப்பு விலக்கல் என்பதால் இது பேரினவாத அரசின் அரசியல் பழிவாங்கலன்றி வேறில்லை. இது, அரசியல் சின்னத்தனம், சிறுபிள்ளைத்தனம்.**

**இதில் இரண்டு முக்கிய விடயங்கள் உள்ளன.**

**ஒன்று – இந்த 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை'யான எழுச்சிப் பேரணி முற்றும் முழுதாக ஓர் அரசியல் நடவடிக்கை, ஜனநாயகச் செயற்பாடு.**

**இரண்டு –அந்த எழுச்சிப் பேரணி எந்த வகையிலும் சட்ட மீறலோ, சட்டத்துக்கு முரணான நடவடிக்கையோ அல்ல. அந்தப் பேரணிக்கு எதிராகப் பல இடங்களில் அந்தந்தப் பிரதேசங்களின் நியாயாதிக்கங்களைக் கொண்ட நீதிமன்றங்கள் தடை விதிக்க மறுத்து விட்டன. சில இடங்களில் நீதிமன்றங்களைத் தவறாக வழி நடத்தி. ஒரு தலைப்பட்சமாக சில உத்தரவுகளை பொலிஸார் நீதிமன்றங்களில் பெற்றனர் எனினும் அங்கும் கூட சட்ட மீறல்கள் இடம்பெறவேயில்லை. அந்தந்தப் பிரதேசங்களில் யார், யாருக்கு எதிராகத் தடை உத்தரவுகள் பெறப்பட்டனவோ, அவர்கள் பேரணியில் செல்லவில்லை. சாணக்கியன் எம்.பி. கூட தமக்கு எதிராகத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிரதேசங்களில் தமது வாகனத்தில் பயணித்துப் போனாரே தவிர, பேரணியில் நடக்கவில்லை.**

**ஆகவே, இந்தப் பேரணியில் வெளிப்படையாக சட்ட மீறல் ஏதும் நடக்கவில்லை.**

**எனவே, தமிழர்களை – தமது மக்களை – ஜனநாயக அரசியல் ரீதியில் எழுச்சி கொள்ள வைத்த தமிழ்த் தலைவர்களின் நீதி, நியாயமான நடவடிக்கையைத் தாங்க முடியாமல் – சகிக்க இயலாமல் – பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு மேற்கொண்ட அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை இது.**

**பாதுகாப்புக்காக தமிழர் அரசியல் தலைமை தங்களைக் கெஞ்சும் – தங்கள் காலில் வந்து வீழும் – என்று அற்ப எதிர்பார்ப்புடன் சிங்களம் எடுத்த நடவடிக்கை இது. இதனால் இந்த நடவடிக்கையை தமிழர் தரப்பு ஆட்சேபித்துக் கண்டித்து எதிர்ப்பு வெளியிட வேண்டுமே ஒளிய, பாதுகாப்பை மீளளியுங்கள் என்று கெஞ்சக் கூடாது.**

**தமிழ்த் தலைவர்களின் பாதுகாப்புக்கு ஏதும் நேர்ந்தால் கோட்டாபய ராஜபக்ஷவின் பௌத்த, சிங்கள பேரினவாத அரசின் அரசியல் காழ்ப்புணர்ச்சி மிக்க பழிவாங்கல் நடவடிக்கைதான் காரணம் – பொறுப்பு – என்பதை வெளிநாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்கள் மூலமும், ஐ.நா. அமைப்புகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச கட்டமைப்புகள் மூலமும் பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் இலங்கை அரசுக்கும் அதன் தலைமைக்கும் உணர்த்தச் செய்யும் பணியை தமிழர் தரப்பு முன்னெடுக்க வேண்டும்.**

**கோட்டாபயவின் அரசு முழுமையாக படைமயப்படுத்தப்பட்டு வருகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. பல தரப்புகளினாலும் இது தொடர்ந்து சுட்டப்பட்டு, எச்சரிக்கப்பட்டு வரும் விடயமும் கூட.**

**அரசியல் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு விவகாரங்களும் படை அதிகாரிகளினால் அல்லது ஓய்வு பெற்ற படை அதிகாரிகளினால் கையாளப்படுகின்றன. அதனால்தான் இத்தகைய கற்றுக்குட்டித்தனமான – மோசமான – செயற்பாடுகள் அரங்கேறுகின்றன என்பது வெளிப்படையானது.**

**இன்னொருவிடயமும்சுட்டிக்காட்டி, வெளிப்படுத்தப்படவேண்டியுள்ளது.**

**யுத்த காலத்தில் – வடக்கு, கிழக்கு யுத்தப் பிரதேசங்களுக்கு வெளியில் – தமிழர்களுக்கு ஒரு தலைமைத்துவத்தை வழங்கி, இதேபோல தமிழர் எழுச்சியைக் குன்ற விடாது பேணிய தலைவர் தியாகராஜா மகேஸ்வரன் எம்.பி.**


**அவருக்கு வழங்கப்பட்டு வந்த அதிரடிப்படைப் பாதுகாப்பை இதே போன்ற அரசியல் காழ்ப்புணர்ச்சி கருதி அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசு விலத்திக் கொண்டது. அதனால் மகேஸ்வரனின் உயிருக்குப் பேராபத்து என அப்போது எச்சரிக்கப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ அரசின் அந்த முட்டாள்தனமான – சிறுபிள்ளைத்தனமான – அரசியல்பழி வாங்கும் இனவாத அரசியல் தீர்மானமே, அடுத்த ஒரு வாரத்தில் மகேஸ்வரன் எம்.பியின் உயிர் பறிக்கப்படுவதற்குப் பிரதான காரணமாயிற்று.**

**அத்தகைய குரூரத்தைத்தான் கோட்டா அரசும் சிறுபிள்ளைத்தனமாக முன்னெடுக்க முயற்சிக்கின்றது என்பதை நேரத்துடன் பதிவு செய்து சுட்டிக்காட்டுகின்றோம்.**

# வடக்கு, கிழக்கு தமிழர் ஆட்சியிருந்தால் தென் இந்தியா பாதுகாப்பாக இருக்கும்!

## தமிழர் பிரதேசத்தில் பொதுவாக்கெடுப்பு இந்திய மத்தியஸ்தத்துடன் நடக்கவேண்டும்

### சி.வீ.விக்னேஸ்வரன் வலியுறுத்தல்



இந்தியாவின் தென்கோடி பாதுகாப்பாக இருக்கவேண்டுமானால் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் உச்சளவு அதிகாரப் பகிர்வுடன் ஆட்சிசெய்யவேண்டும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றை தமிழ் மக்களே தெரிவுசெய்யும் வகையில் சர்வதேச சமூகத்தால் வடக்கு கிழக்கில் பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான நடவடிக்கையை இந்தியா தலைமை ஏற்று நடத்த முன்வர வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வீ. விக்னேஸ்வரன்.

இந்த விடயம் தொடர்பில் அவரால் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட வாராந்த கேள்வி - பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கேள்வி: கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்குவதில்லை என்று அமைச்சரவையில் எடுத்துள்ள முடிவு பற்றிய உங்கள் கருத்து என்ன?

பதில்: நான் எனது உரைகளில் தொடர்ச்சியாக கூறி வந்ததே இன்றைக்கு இந்தியாவுக்கு நடந்துள்ளது. அன்று தொட்டு இன்றுவரை இலங்கையில் மாறி மாறி ஆட்சி செய்து வரும் அரசாங்கங்கள் இந்தியாவை ஏமாற்றியே வந்துள்ளன. அதன் தொடர்ச்சியே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விடயத்தில் நடந்துள்ளது. ஜெனிவா மனித உரிமைகள் சபை கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னரே இது நடைபெறும் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அது சற்று முன்னதாகவே நடந்து விட்டது. யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள மூன்று தீவுகளை இலங்கை அரசாங்கம் சீன நிறுவனமொன்றுக்கு மின் திட்டங்களை ஆரம்பிக்க வழங்க இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இது மிகவும் பாரதூரமான ஒரு விடயம்.

இனியாவது இலங்கைத் தீவில் நிரந்தர நம்பிக்கைக்குரிய தரப்பாக இந்தியா தமிழ் மக்களைக் கருதி அவர்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் அவர்களின் அதிகாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதை மையப்படுத்தி தனது கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

இந்தியாவின் தென்கோடி பாதுகாப்பாக இருக்கவேண்டுமானால் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் உச்சளவு அதிகாரப் பகிர்வுடன் ஆட்சிசெய்யவேண்டும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ் மக்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றை தமிழ் மக்களே தெரிவுசெய்யும் வகையில் சர்வதேச சமூகத்தால் வடக்கு கிழக்கில் பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான நடவடிக்கையை இந்தியா தலைமை ஏற்று நடத்த முன்வர வேண்டும்.

கிழக்கு முனை விடயத்தில் நடந்ததே நாளை 13 ஆவது அரசியல் திருத்த விடயத்திலும் நடக்கும். ஒற்றை ஆட்சியின் கீழான எந்தத் தீர்வுக்கும் இந்த நிலைமையே ஏற்படும் என்பதை இந்தியா உணர்ந்துகொள்ள வேண்டும்.

1987 ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போது இந்திய மாநிலங்களுக்கு வழங்கும் அதே உரிமைகளை இலங்கையின் மாகாணங்களுக்கு வழங்க வேண்டும் என்றே பேச்சுகள் நடைபெற்றன. ஆனால் ஜே.ஆர்.அவற்றை எல்லாம் மாற்றி ஓர் உருப்படாத 13 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அவர் பின் வந்த ஆர்.பிரேமதாஸ அதற்கு ஒரு படி மேலே போய் அரசாங்க அதிபர், மாவட்ட செயலர், கிராம சேவகர் ஆகியோரை மாகாண அதிகாரத்தின் கீழிருந்து பிரித்தெடுத்து மத்திய அரசின் அதிகாரத்துக்குக் கீழ் கொண்டு வந்தார். வலுவற்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தில் கொடுத்த சொற்ப காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கூட இது வரையில் எந்த சிங்கள அரசாங்கமும் தரவில்லை. சிங்கள அரசாங்கங்கள் கயிறு கொடுப்பதில் மன்னாதி மன்னர்கள். இதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். தங்கள் காரியம் முடியும் வரையில் காலைப் பிடிப்பார்கள். அதன் பின் கழுத்தைப் பிடிப்பார்கள். இந்தியாவும் இலங்கைத் தமிழ் மக்களும் ஒருவர்க்கொருவர் உதவியாக இல்லா விட்டால் இருவருக்குமே அதோ கதி தான். - என்று உள்ளது.

# கோதுமை மாவின் விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை!

**கொழும்பு, ஜன. 09**

**புதிய விலையின் பிரகாரம் கோதுமையினை விற்பனை செய்தால் கோதுமை மா உற்பத்தி நிறுவனங்கள் பெரும் நட்டத்தை எதிர்க் கொள்ள நேரிடும்.**

**ஆகவே, நிர்ணயிக்கப்பட்ட புதிய விலையினை ஆறு அல்லது ஏழு ரூபாவால் அதிகரிக்குமாறு கோதுமை மா உற்பத்தி நிறுவன உரிமையாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

**கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல், அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவிற்கும் பிரதான நிலை கோதுமை மா உற்பத்தி நிறுவனங்களுக்கும் இடையிலான பேச்சு நேற்று (திங்கட்கிழமை) அமைச்சின் காரியாலயத்தில் இடம்பெற்றது.**

**அதிலேயே மேற்படி விலை அதிகரிப்பு தொடர்பான கோரிக்கை விடுக்கப்பட்டது.**

# நாடாளுமன்றில் பி.சி.ஆர். சோதனை அனைத்து எம்.பிக்களுக்கும் அழைப்பு

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெறவுள்ள பி.சி.ஆர். சோதனை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணி முதல் மதியம் 12 மணிவரை பி.சி.ஆர். சோதனை நடத்தப்படும் என நாடாளுமன்ற படைகள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

இந்தப் பரிசோதனை நடவடிக்கைகள் வாரத்துக்கு ஒருமுறையும் நாடாளுமன்ற அமர்வு வாரங்களிலும், அமர்வுகள் இடம் பெறாத காலப்பகுதியிலும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத் திணைக்களத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றது.

2021 ஜனவரி மாதம் 13 ஆம் திகதி முதல் இதுவரை நாடாளுமன்ற வளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையின் படி இறுதியாக 25 ஆம் திகதி 190 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் இதில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லையென்பது உறுதிப் படுத்தப்பட்டது.

# நாட்டின் அந்நிய செலாவணி சிக்கலை தீர்க்க சர்வதேச நாணய நிதியத்துடன் பேசவேண்டும்!

நாடு எதிர்கொண்டுள்ள அந்நிய செலாவணி பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொள்ள சர்வதே நாணய நிதியத்துடன் கலந்துரையாடவேண்டும். அதற்காக நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகி இருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாளர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாட்டின் அந்நிய செலாவணியில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள அரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை தொடர்பாக தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்–

நாடு பொருளாதார ரீதியில் பாரிய பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. நாட்டின் அந்நிய செலாவணியில் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியாவிடம் இருந்து பெற்றுக்கொண்ட 40 கோடி ரூபாவை விரைவாக கொடுக்கவேண்டிய இக்கட்டான நிலைமைக்குத் தள்ளப்பட்டதாலேயே அரசாங்கம் அதனை செலுத்தி இருக்கின்றது. ஆனால் இந்தியாவுக்கு செலுத்தவேண்டிய காலத்திலேயே இதனைச் செலுத்தியதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.



இந்தியாவிடம் பெற்றிருந்த 40 கோடி ரூபா கடன் தொகையை பெப்ரவரி முதலாம் திகதியே செலுத்தியிருக்கவேண்டும். பெப்ரவரி முதலாம் திகதியுடன் அதன் ஒப்பந்தகாலம் முடிவடைகின்றது. உரிய காலத்தில் செலுத்தாமல் இன்னும் 3, 6 மாதங்களில் செலுத்துவதாக இருந்தால், அதுதொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி செலுத்த முடியுமான வசதிகளை அமைத்துக்கொள்ளவேண்டும் என்றே அந்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அரசாங்கத்திடம் முறையான கொள்கை ஒன்று இல்லாததன் காரணமாக நாட்டின் அந்நிய செலாவணி நாளுக்கு நாள் குறைவடைந்து செல்கின்றது. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டிருந்தால், இந்தியாவுக்கு செலுத்தவேண்டி இருந்த 40 கோடி ரூபாவை செலுத்துவதற்கு இன்னும் காலம் எடுத்துக்கொள்ள முடியுமாக இருந்தது.

மேலும் நாட்டின் அந்நியச் செலாவணி பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஆரம்பமாக நாங்கள் நாட்டில் பாரிய நிதி பிரச்சினை இருப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதன் பிறகு, அதனைத் தீர்த்துக்கொள்ளத் தேவையான மாற்று வேலைத்திட்டங்களை அமைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு சர்வதே நாணய நிதியத்துக்கு செல்ல வேண்டி ஏற்படுகின்றது. இந்தியாவுக்கு செலுத்த இருந்த 40 கோடி ரூபா சிறிய விடயம். ஏனெனில் நாங்கள் இந்த வருடத்துக்குள் 600 கோடி டொலர் செலுத்த இருக்கின்றது. அதனை எப்படி செலுத்துவதென்பதுதான் பிரதான பிரச்சினை. அதற்கான மாற்று வேலைத்திட்டங்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.– என்றார்.

## 100 தொகுதி அமைப்பாளர்களை நியமித்தது ஐக்கிய மக்கள் சக்தி!

*ஐக்கிய மக்கள் சக்தியின் 100 தொகுதி அமைப்பாளர்களை நியமிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.*

*ஐக்கிய மக்கள் சக்தியினை கீழ் மட்டத்தில் இருந்து வலுப்படுத்துவதற்காகவே இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என கட்சியின் தேசிய தொகுதி அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.*

*கீழ் மட்டத்தில் இருந்து செயற்படும் பெண்கள், இளைஞர்களை பாதுகாத்தல், ஒன்றிணைத்தல் உள்ளிட்ட பல பொறுப்புக்கள் நியமிக்கப்படவுள்ள தொகுதி அமைப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.*

*அத்துடன் இந்த பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகிறதா என்பது தொடர்பில் கண்காணிக்கப்படவுள்ளது எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.*

## இலங்கையில் இதுவரையில் 161,773 பேருக்குத் தடுப்பூசி!

இலங்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேலும் ஆயிரத்து 625 சுகாதார பிரிவினருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து, இதுவரை நாட்டில் ஒரு லட்சத்து 61 ஆயிரத்து 773 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. கடந்த மாதம் 29 ஆம் திகதி இலங்கையில் கொரோனா தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## எத்தகைய நெருக்கடிகள் ஜெனிவாவில் வந்தாலும் நாட்டின் சுயாதீனத் தன்மையை விட்டுக்கொடோம்!

### மஹிந்த இறுமாப்பு



யுத்தத்தை வெற்றி கொண்ட இராணுவத்தினரை நல்லாட்சி அரசாங்கம் ஜெனிவாவில் குற்றவாளியாக்கியது. பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை நன்கு அறிந்து நாட்டுக்கு எதிரான பிரேரணையில் இருந்து விலகினோம். எவ்வாறான நெருக்கடி ஏற்பட்டாலும் நாட்டின் சுயாதீனத்தன்மையை விட்டுக் கொடுக்கமாட்டோம். நாட்டின் உரிமை நாட்டு மக்களுக்கே வழங்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மத நிகழ்வு ஒன்றில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மேலும் குறிப்பிடுகையில் –

பௌத்த சாசனத்தை முன்னிலைப்படுத்தி அரச நிர்வாகம் முன்னெடுக்கப்படுகிறது. நாட்டின் நன்மைக்கு சர்வ மதங்களின் ஆசீர்வாதம் அவசியமாகும். அனைத்து மதத்தின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. பௌத்த சாசனத்துக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கம் செயற்பட்டது. இதனால் கடந்த காலங்களில் மதங்களுக்கிடையில் பாரிய பிணக்கு ஏற்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் ராஜபக்ஷ பெயருடன் தொடர்புடையவர்களையும், எமது ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகளையும் நல்லாட்சி அரசாங்கம் அரசியல் பழிவாங்கல்களுக்குட்படுத்தியது. பௌத்த மதத்துக்கும், பௌத்த மத தலைவர்களுக்கும் எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட பௌத்த சாசனத்தை பாதுகாக்க வேண்டிய எதிர்பார்ப்பு அனைத்து தரப்பிலும் காணப்பட்டது. இவ்வாறான நிலையில் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. பௌத்த சாசனத்தைப் பாதுகாக்க புதிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. பிக்குகளின் பெற்றோருக்கு வீடு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

30 வருட கால யுத்தம், பொருளாதாரம், சமூகம், நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. முடிக்க முடியாது என்று குறிப்பிட்ட யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து குறுகிய காலத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பொருளாதாரம் ஆகியவற்றை ஒருசேர முன்னேற்றமடையச் செய்தோம்.

யுத்தத்தை வெற்றி கொண்ட இராணுவத்தினரை நல்லாட்சி அரசாங்கம் ஜெனிவாவில் குற்றவாளியாக்கியது. நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை நன்கறிந்து நாட்டுக்கு எதிரான பிரேரணையில் இருந்து விலகினோம். நாட்டின் சுயாதீனத்தன்மைக்காக நெருக்கடியான பல தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

தற்போதும் கூட நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் சுயாதீன முறையில் தீர்மானம் எடுத்துள்ளோம். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மத தலைவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள். ஆகவே மத தலைவர்கள் அரசாங்கத்தின் குறைபாடுகளை சுட்டிக்காட்டி ஆட்சியை நல்வழிப்படுத்த தொடர்ந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.– என்றார்.

## சர்வதேச நீதிமன்றத்தின் முன் இலங்கை செல்லும் வாய்ப்பு!

### இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பிரதீப மகாநாமகேவா

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை அடிப்படையாக வைத்து சர்வதேச அமைப்புகள் இலங்கையை சர்வதேச நீதிமன்றத்துக்கு எடுத்து செல்வதற்கான வாய்ப்புள்ளது என எச்சரிக்கை விடுத்துள்ளார் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பிரதீப மகாநாமகேவா.

எனவே ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தை எதிர்கொள்வதற்கு இந்தியாவின் ஆதரவு மிகவும் முக்கியமானது எனவும் அவர் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானங்களுக்கு எதிராக இடைக்கால யோசனையொன்றை முன்வைக்கலாம்.

அவ்வாறான சூழ்நிலையில் இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கு மிகவும் அவசியமானது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை எதிர்ப்பதை நானும் விரும்புகின்றேன்.

அந்த அறிக்கை நாட்டில் தற்போது காணப்படும் நிலைமைக்கு முரணானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்றை முன்வைத்தால் அதனை எதிர்கொள்வதற்கான திட்டம் அவசியம் எனத் தெரிவித்துள்ள அவர் இலங்கையில் மனித உரிமை நிலைவரத்தை முன்னேற்றுவதற்கான திட்டமும் அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மியன்மார் பாணியிலான இராணுவ ஆட்சிக்கு ஜனாதிபதி முயல்கின்றார்!

### சட்டத்தரணிகள் சாடல்



ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ மியன்மார் பாணியிலான இராணுவ ஆட்சிக்கு முயல்கின்றார் என சட்டத்தரணி சிரால் லக்திலக தெரிவித்துள்ளார்.

தேசிய நூலகம் மற்றும் ஆவண சேவைகள் வாரியத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய சட்டத்தரணி சிரால் லக்திலக, ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றால் சர்வாதிகார ஆட்சி ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டபோதிலும் மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான குழு நாட்டின் சட்டங்களுக்கு அப்பால் உருவாக்கப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ள அவர், அரசாங்கம் தனது அரசியல் நிகழ்ச்சி நிரலிற்காக இந்த ஆணைக்குழுவின் அறிக்கையைப் பயன்படுத்தினால் மோசமான விளைவுகள் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஆணைக்குழு நாட்டின் நீதித்துறையின் அடிப்படைக்கே அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டங்களை ஜனாதிபதி துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்றும் ஜனநாயக வழியிலான ஆட்சி முறையைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஐ.நா. மனித உரிமை ஆணையகத்துக்கு இலங்கையைத் தண்டிக்க அதிகாரமில்லை!

## அமைச்சர் தினேஷ் குணவர்தன வீறாப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கைக்கு அரசாங்கத்தின் எதிர்ப்பை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு எழுத்துமூலம் சமர்ப்பித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்து ஆசிபெற்றதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் ஏதாவது இடம்பெற்றால் நாட்டின் அரசமைப்புக்கு அமைய மாத்திரமே அது தொடர்பில் செயற்பட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரை, கொரோனா பரவல் காரணமாக இணையவழி காணொளி முறையில் முன்னெடுப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கண்டியில் வெளிவிவகார அமைச்சின் கண்டி உதவி தூதரகத்தையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

இதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பல குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்றும், அவை நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்களை ஒவ்வொன்றாக விளக்கி, அவர்களுக்கு எழுத்துபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இந்த அறிக்கை இலங்கைக்கு மட்டுமல்ல, மேலும் 10 நாடுகளுக்கும் தண்டனை வழங்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அத்தகைய முறையில் செயற்பட ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை எனவும் இது, ஐ.நா. பொதுச் சபை மூலமே செயற்படுத்தப்பட வேண்டியதொன்றாகும் எனவும் அவர் வலியுறுத்தினார் .

மேலும் இதனை எதிர்கொள்ள இலங்கை தயாராக இருப்பதாகவும், அதனுடன் இணைந்த நாடுகளுடன் தற்பொழுது கலந்துரையாடி வருகின்றன எனவும் அவர் கூறினார்.

பயங்கரவாத கட்டுப்பாட்டுக்குள் இருந்த மூன்று லட்சம் அப்பாவி பொதுமக்களை விடுவித்த பின்னர், அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் மேலும் விடுதலைப்புலிகள் இராணுவத்தினரால் புனர்வாழ்வளிக்கப்பட்டு , அவர்கள் இப்போது சொந்த கிராமப்புறங்களில் நன்றாக வாழ்ந்து வருகின்றனர் எனவும் தெரிவித்த அமைச்சர் , இலங்கை அரசாங்கம் எந்தவொரு இனத்தினரையும் பழிவாங்கவில்லையெனவும் பயங்கரவாதத்தை தோற்கடித்த பின்னர் அவர்களின் அபிலாஷைகள் வடக்கு மக்களால் தோற்கடிக்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.

ஓர் இறையாண்மை கொண்ட நாடு என்ற வகையில், நாட்டுக்குள் நடக்கும் விடயம் தொடர்பாக நாட்டின் அரசமைப்பின் படி செயற்பட அதிகாரம் உள்ளது. முந் தைய அரசாங்கம் வெளிநாட்டு நீதிபதிகளை அழைத்து வந்து ஆவணங்களில் கையெழுத்திட ஒப்புக்கொண்ட போதிலும், இது முற்றிலும் அரசமைப்பிற்கு முரணான செயல். இந்த விவகாரம் தொடர்பாக உள்ளக விசாரணை நடத்த உச்சநீதிமன்ற நீதிபதியால் ஓர் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் தற்போதைய செயற்பாடுகள் சர்வதேச அழுத்தத்தை மேலும் வலுவாக்கும்!

## ராஜித சேனாரத்ன எச்சரிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை மீது மேலும் அழுத்தம் பிரயோகிக்கக் கூடிய வகையிலேயே தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஜனாதிபதியால் அண்மையில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

அநுராதபுரத்தில் அமைந்துள்ள டி.எஸ்.குணசேகர என்ற நிறுவனத்தின் ஊடாக ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானோரால் செய்யப்பட்டுள்ள மோசடிகள் தொடர்பான ஆதாரங்கள் எமக்கு கிடைத்துள்ளன. இந்த நிறுவனத்திற்கு 3.1 பில்லியன் கடன் வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்தக் கடன் தொகை உரிய நேரத்தில் மீள செலுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதன் மூலம் அரச வங்கிகள் பாரிய நஷ்டமடைந்துள்ள போதிலும் ராஜபக்ஷ குடும்பத்தினர் இலாப மீட்டிக் கொண்டுள்ளனர். அநாவசியமாக விடயங்களுக்கு ஆணைக்குழுக்கள் அமைப்பதை விட இவ்வாறான விடயங்கள் தொடர்பில் ஆணைக்குழு அமைக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை இலங்கை மீது மேலும் மேலும் அழுத்தம் பிரயோகிக்கும் வகையிலேயே தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும். ஆணைக்குழுக்கள் ஊடாக மக்களின் சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. தெரிந்து கொண்டே மீண்டும் தவறிழைக்கின்றனர். லசந்த விக்கிரமதுங்க, வசீம் தாஜுதீன் உள்ளிட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். பிரகீத் எக்னலிகொட காணாமலாக்கப்பட்டுள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் மறக்கப்பட முடியாதவை.– என்றார்.

# கிழக்கில் 2,534 தொற்றாளர்கள் 16 மரணங்கள் பதிவாகியுள்ளன!

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தகவல்



கிழக்கு மாகாணத்தில் இதுவரை இரண்டாயிரத்து 534 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனக் கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், வைத்தியர் அ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் இரண்டாயிரத்து 278 பேர் சிகிச்சை பெற்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளமையுடன், 16 பேர் கொரோனாவால் மரணித்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் 486 பேர், மட்டக்களப்பு மாவட்டத்தில் 619 பேர், அம்பாறையில் 175 பேர், கல்முனை சுகாதார பிராந்தியத்தில் ஆயிரத்து 256 பேர் என இரண்டாயிரத்து 534 பேர் இது வரையான காலப்பகுதியில் கொரோனாத் தொற்றுடன் கண்டறியப்பட்டுள்ளனர். இதேவேளை, இன்னும் 265 பேர் தொடர்ந்து சகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக 46 சுகாதார அதிகாரிகள் பிரிவின் சுகாதார ஊழியர்களுக்கும் அவர்களுடன் சார்ந்தவர்களுக்கும் என எட்டாயிரத்து 503 பேருக்குத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக வைத்தியர் லதாகரன் தெரிவித்துள்ளார்.

# மத்தளை விமான நிலையத்துக்கு 2,500 சுற்றுலா பயணிகள் வருகை

2021 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் இதுவரையான காலப்பகுதியில் மத்தளை சர்வதேச விமான நிலையத்திற்கு 2 ஆயிரத்து 500 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாத் துறையின் மீட்புத் திட்டத்தின் பேரில் கசகஸ்தானின் அஸ்தானா விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், 160 சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வந்ததன் பிரதிபலனாகவே சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் சுற்றுலாத்துறை முகவர் நிறுவனமான எயிட்கன் ஸ்பென்ஸ் நிறுவனத்தினர் இந்த வருடம் ஏப்ரல் மாதம் வரை கசகஸ்தானிலிருந்து 350 சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்குத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

கசகஸ்தானின் தேசிய விமான சேவையான அஸ்தானா விமான சேவைக்கு மேலதிகமாக ஸ்கெட் விமான சேவையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை மத்தளை சர்வதேச விமான நிலையத்துக்கு தனது சேவைகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 24 மணித்தியாலத்தில் 245 பேருக்கு தொற்று!

## கொழும்பில் குறைந்தபாடில்லை

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் தொற்று உறுதியானவர்களில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளதாக கொவிட் – 19 பரவல் தடுப்பு தேசிய செயற்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் 245 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

இதுதவிர கம்பஹா மாவட்டத்தில் 214 பேருக்கும் இரத்தினபுரியில் 53 பேருக்கும் கொவிட் – 19 தொற்று உறுதியாகியுள்ளது.

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் 260 பேருக்கு நேற்று கொவிட் – 19 தொற்று உறுதியாகியுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்றைய தினம் இலங்கையில் மொத்தமாக 772 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கொரோனாத் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 69 ஆயிரத்து 348 ஆக அதிகரித்துள்ளது.

# குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு நிவாரணம்!

எதிர்வரும் தமிழ் – சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் சமுர்த்தி பயனாளர்கள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு மின்சார இணைப்புகளை வழங்க மின்சக்தி எரிசக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய இந்தத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் டளஸ் அலகபெரும தெரிவித்துள்ளார்.

வறுமையில் உள்ள குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரணம் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அவர்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்த அனைத்தையும் செய்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதிலொரு கட்டமாக இந்தாண்டு இறுதிக்குள் அனைத்து குடும்பங்களுக்கும் மின்சாரம் வழங்க மின் மற்றும் எரிசக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியா நகரசபை ஊழியர் ஒருவர் சத்தியாக்கிரகத்தில்!

வவுனியா நகரசபையின் ஊழியர் ஒருவர் நகரசபை நிர்வாகத்துக்கு எதிராக கடந்த 13 நாள்களாக சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

வவுனியா நகரசபையின் பொது நூலகத்தில் பணியாற்றி வந்த க.கோல்டன் என்ற நூலக பணியாளரே தனக்கு நகரசபை நிர்வாகம் அநீதி இழைத்துள்ளதாகத் தெரிவித்து சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

போராட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்த அவர் -

கடந்த 20 வருடங்களாக பொதுநூலகத்தில் பணியாற்றி வருகின்றேன். நான் தொழிலாளர்களின் உரிமைக்காக கடந்த காலத்தில் போராட்டங்களை முன்னெடுத்திருந்தேன். இதன் காரணமாக என்னைப் பழிவாங்கும் முகமாக எனக்கு நகரசபை நிர்வாகத்தினரால் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

எனது பணியை இடைநிறுத்தி என்னை நகரசபை பூங்காவில் சுத்திகரிப்பு பணியில் நகரசபை நிர்வாகம் அமர்த்தியுள்ளது. இதன் காரணமாக எனது பணியின் முன் அனுபவ காலம் பாதிக்கப்பட்டுள்ளது.

நகரசபை நிர்வாகம் என்னை பழிவாங்குவதை நிறுத்தி எனக்கு மீண்டும் நூலகத்தில் பணி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்தப் போராட்டம் தொடர்பாக நகரசபை நிர்வாகத்திடம் கேட்டபோது அந்தப் பணியாளரின் நியமனம் தொடர்பான வேலையே அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அனைத்து ஊழியர்களுக்கும் குறிப்பிட்ட காலப்பகுதியில் சுழற்சி முறையில் பணியை மாற்றி வழங்கும் முகமாகவே பணிமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பணியாளருக்கு எங்களால் அநீதி இழைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து தனியாக போராடி வந்த நகரசபை பணியாளர் க.கோல்டனுக்கு ஆதரவு தெரிவித்து சக தொழிலாளர்களும் போராட்டத்தில் இணைந்துள்ளதுடன், இரவு பகலாக போராட்டம் இடம்பெற்று வருகின்றது.




# குடும்பஸ்தரை காணவில்லை!

செட்டிகுளம் பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஜன.09

வவுனியா, செட்டிகுளம் சண்முகபுரம் பகுதியில் வசித்து வரும் 2 பிள்ளைகளின் தந்தையான இராமையா நல்லநாதனை காணவில்லை என அவரின் மனைவி செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

மேற்படி நபர் கடந்த வெள்ளிக்கிழமை கடைக்கு செல்வதாக தெரிவித்துவிட்டு வீட்டில் இருந்து சென்றுள்ளார். 2 நாள்கள் கடந்தும் வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து அவரின் மனைவி செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

இவரை யாராவது கண்டால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது கீழேயுள்ள இலக்கத்திற்கோ அழைப்பை (தொலைபேசி இலக்கம் -0766975067) ஏற்படுத்தி தெரிவிக்குமாறு பொது மக்களிடம் உதவி கோரப்பட்டுள்ளது.

# 27 அத்தியாவசிய பொருள்கள் நேற்று முதல் விலை குறைப்பு!

கொழும்பு, ஜன. 09

இலங்கையில் நேற்று (திங்கட்கிழமை) முதல் 27 அத்தியாவசிய பொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளன என வர்த்தகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய விலையின் நிர்ணய தன்மை எதிர்வரும் மூன்று மாத காலத்துக்கு நிலையாக பேணப்படுவதுடன், இடைப்பட்ட காலத்தில் தெரிவு செய்யப்பட்ட 27 அத்தியாவசிய பொருள்களின் விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்று வர்த்தகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

நுகர்வோர் லங்கா சதொச, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள், கியு - ஷொப் விற்பனையகங்கள் ஊடாக இந்த நிவாரண விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும்.

தேசிய உற்பத்திகளின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளமை தற்போதைய விலை குறைப்புக்கான பிரதான காரணியாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமான விலையில் பொருள்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க விசேட கண்காணிப்பு நடவடிக்கை நாடு தழுவிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அதன்படி விலை குறைக்கப்பட்ட பொருள்களின் விவரம்:-

வெள்ளை அரிசி ஒரு கிலோ - 93 ரூபா, வெள்ளை நாடு அரிசி ஒரு கிலோ - 96 ரூபா, சம்பா ஒரு கிலோ - 99 ரூபா, கீரி சம்பா ஒரு கிலோகிராம் - 125 ரூபா, கோதுமை மா ஒரு கிலோகிராம் - 84 ரூபா, வெள்ளை சீனி ஒரு கிலோகிராம் - 99 ரூபா, சிவப்பு சீனி ஒரு கிலோகிராம் - 125 ரூபா, தேயிலை தூள் 100கிராம் பெக்கட் - 95 ரூபா, சிவப்பு பருப்பு ஒரு கிலோகிராம் - 165 ரூபா, பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராம் - 120 ரூபா, உருளைக்கிழங்கு (தேசிய உற்பத்தி) ஒரு கிலோகிராம் - 180 ரூபா, உருளைக்கிழங்கு (பாகிஸ்தான்) ஒரு கிலோகிராம் - 140 ரூபா, கடலை ஒரு கிலோகிராம் - 175 ரூபா, உலர் மிளகாய் ஒரு கிலோகிராம் - 495 ரூபா, டின் மீன் 425 கிராம் - 220 ரூபா, ரின்மீன்(இறக்குமதி)- 265 ரூபா, நெத்திலி 1கிலோகிராம் - 575 ரூபா, கோழியிறைச்சி ஒரு கிலோகிராம் - 400 ரூபா, உப்பு ஒரு கிலோகிராம் -43 ரூபா, பால்மா 400 கிராம் -355 ரூபா, சோயா எண்ணெய் 500 மி.லீ. - 310 ரூபா, ஆடை கழுவும் சவர்க்காரம் 115 கிராம் - 43 ரூபா, பார் சவர்க்காரம் 650 கிராம் - 260 ரூபா, வாசனை சவர்க்காரம் 100 கிராம் - 56 ரூபா, பற்பசை - 250 ரூபா, முகக்கவசம் - 14 ரூபா.

# கஞ்சா சேனை தீயிட்டு அழிப்பு!

நுவரெலியாவில் அதிரடிப்படை அதிரடி



நுவரெலியா மாவட்டத்திலுள்ள நானுஓயா எடின்புரோ தோட்டத்திற்கு மேற்பகுதியில் உள்ள அரசாங்க வனப்பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்ட சேனையொன்றை நுவரெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சுற்றி வளைத்துள்ளனர்.

குறித்த கஞ்சா சேனையில் 3 மற்றும் 5 அடி உயரமான 272 கஞ்சா செடிகள் இருந்தன எனவும், சுற்றிவளைப்பின் போது கஞ்சா செய்கையில் ஈடுபட்ட நபர் தப்பியோடிவிட்டார் எனவும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக 3 செடிகளை மட்டும் வைத்துக்கொண்டு ஏனைய கஞ்சா செடிகளை தீயிட்டு அழிப்பதற்கு விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கை எடுத்தனர்.

அத்துடன், இதன் பின்னணியில் உள்ளவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையையும் விசேட அதிரடிப்படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இதற்கு முன்னரும் நுவரெலியாவில் கஞ்சாவுடன் நபர்கள் கைதாகியிருந்தாலும், வனப்பகுதியில் பாரியளவில் கஞ்சா செய்கை செய்யப்பட்ட தோட்டமொன்று சுற்றிவளைக்கப்பட்டமை இதுவே முதல் சந்தர்ப்பமாக கருதப்படுகின்றது.

# க.பொ.த. சாதாரணதர மாணவர் மூவருக்கு ஹற்றனில் தொற்று!

ஹற்றன் வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள ஹற்றன் பாடசாலையொன்றில் மூன்று மாணவர்களுக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் தரம் 11 இல் கல்வி கற்கும் மூன்று மாணவர்களுக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலையின் மாணவர்கள் சிலருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து குறித்த மூன்று மாணவர்களும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த மாணவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஹற்றன் மற்றும் வட்டவளை பிரதேசங்களை சேர்ந்த மாணவர்களே இவ்வாறு தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில் அவர்கள் தற்போது தனிமைப்படுத்தல் சிகிச்சை மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 3.9 மில்லியன் முறைகேடு:

# மஹிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிரான விசாரணைகள் நிறைவு!

இலங்கை சுதந்திர ஊழியர் காங்கிரஸ் எனப்படும் தொழிற்சங்கத்துக்கு சொந்தமான 3.9 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியதாக கூறப்படும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிரான வழக்கின் விசாரணைகள் நிறைவடைந்தன.

குறித்த வழக்கு நேற்று (திங்கட்கிழமை) கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெதிகே முன் விசாரணைக்கு வந்தது.

இதன்போது குற்றச்சாட்டுகளுக்கு போதுமான ஆதாரம் இல்லாததால் தனது கட்சிக்காரரை விடுவிக்குமாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் சட்டத்தரணி நீதிமன்றில் நீதிமன்றத்தில் கோரியிருந்தார்.

இதனை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கு தொடர்பான தீர்ப்பை எதிர்வரும் பெப்ரவரி 25 ஆம் திகதி வழங்குவதாக அறிவித்தார்.

# வடக்கு கல்வித்துறையை மேம்படுத்த நடவடிக்கை!

அமைச்சர் பீரிஸ் உத்தரவாதம்



வடக்கு மாகாணத்தில் கல்வித்துறையை மேம்படுத்த அரசாங்கத்தின் பங்களிப்பு அவசியமானதாகும்.

தேவைகளை கண்டறிந்து அவற்றிற்கு முன்னுரிமை வழங்கி கல்வித்துறையை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய நல்லிணக்கத்தை பாடசாலை மட்டத்தில் மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

யாழ் - நயினை நாகபூசனி அம்மன் கோயிலில் வழிபாட்டில் ஈடுப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

48 வருட காலத்துக்கு மேல் நாகதீப விகாரையில் சிறப்பான முறையில் சேவையாற்றும் மதகுருமார்கள் கௌரவிக்கப்பட வேண்டும். வடக்கு வாழ் மக்களின் சுகாதாரம், கல்வி, மற்றும் பொருளாதாரம், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசியல் காரணிகளுக்கு அப்பால் பொதுக் கொள்கையில் இருந்து செயற்படுகின்றமை அவசியமாகும்.

கல்வி, விவசாயம் மற்றும் மீன்பிடிக்கைத்தொழில் ஆகிய துறைகளில் வடக்கு மக்களை முன்னேற்றமடைய செய்ய வேண்டும் என்பது தொடர்பில் யாழ். கர்தினால் ஆண்டகையுடனான சந்திப்பின் போது பேசப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்வி சேவை அதிகாரிகளையும் சந்திக்க வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவது அவசியமாகும். அதற்காக வடக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளை ஒன்றிணைக்கும் செயற்திட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட மூவர் கைது; சந்தேக நபர்களிடம் போதைப்பொருள் சிக்கியது

கோண்டாவில் செபஸ்தியான் வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு வீடு புகுந்து குடும்பத் தலைவரை வாள் மற்றும் கத்தியால் வெட்டி படுகாயப்படுத்தி, 6 பவுண் தாலிக்கொடியை கொள்ளையிட்ட கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்தவை வருமாறு:-

கோப்பாய் வைத்தியசாலையில் கடமையாற்றுபவரின் வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொள்ளைக் கும்பலின் வாள்வெட்டுக்கு இலக்காகியவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



தடயங்களின் அடிப்படையில் கோண்டாவிலைச் சேர்ந்த மூவர் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர். 40, 30 மற்றும் 23 வயதுடைய சந்தேக நபர்களே கைது செய்யப்பட்டனர். பிரதான சந்தேக நபரிடமிருந்து 2 கிராம் 50 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருள், கொள்ளையிடப்பட்ட தாலிக் கொடி, வாள் மற்றும் கத்தி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மேல்மாகாணத்துக்கு வெளியில் 3 மடங்கு கொரோனா அச்சம்!



மேல் மாகாணத்துக்கு வெளியில் கொரோனா அச்சுறுத்தல் 3 மடங்கு அதிகரித்திருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் இதுதொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அந்த சங்கத்தின் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

எனினும் அது தொடர்பில் கவனம் செலுத்தாமை காரணமாகத் தற்போது நாடு முழுவதும் நோயாளர்கள் அடையாளம் காணப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த நிலைமையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால், இந்த மாத இறுதியின்போது மிகவும் அபாயமான நிலைமை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என அந்த சங்கத்தின் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

## கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு நேர்முகப் பரீட்சை 15 ஆம் திகதி!

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம், மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஐம்பது கற்கை நெறிகளுக்காக நான்காயிரத்து 253 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். மாணவர்களை உள்வாங்குவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கான நேர்முக பரீட்சைக்குரிய கடிதங்கள் உரிய கல்வியியல் கல்லூரிகளினூடாக தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## தனியார் பஸ் உரிமையாளர்களின் வேலை நிறுத்தம் இடைநிறுத்தம்!

தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்று நள்ளிரவு முதல் முன்னெடுக்க திட்டமிட்ட வேலை நிறுத்த போராட்டம் ஒருவாரத்துக்குஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை இராஜாங்க அமைச்சர் நிவார்ட் கப்ராலுடன் இடம்பெற்றகலந்துரையாடலைதொடர்ந்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனியார் பஸ்களுக்கான தவணை கட்டணத்திற்கான வட்டியை குறைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தியே வேலை நிறுத்தத்தில் ஈடுபட திட்டமிட்டிருந்தனர்.

## பாடசாலை போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் பஸ்களில் விசேட நடவடிக்கை!

பொலிஸ் ஊடகப் பேச்சாளர்



பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு நேற்று (திங்கட்கிழமை) எழுமாறாக அன்டிஜன் பரிசோதனை செய்யப்பட்டது.

அத்தோடு பாடசாலை சேவை பஸ்களில் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்காக இன்று முதல் பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் விஷேட சுற்றிவளைப்புக்களை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணத்திலுள்ள பகுதிகளிலும் நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களிலும் தனிமைப்படுத்தல் தொடர்பில் கண்காணிப்பதற்கான சுற்றி வளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் முகக் கவசம் அணியாமை, சமூக இடைவெளியை பேணாமை என்பவற்றுக்காக 11 பேர் மாத்திரமே கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை 3 ஆயிரத்து 22 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டதைப் போன்று தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான சுற்றிவளைப்புக்கள் வழமையைப் போன்று தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

குறிப்பாக கொழும்பில் பொது மக்கள் அதிகளவில் ஒன்று கூடக்கூடிய இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு எழுமாறாக அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும்.

மேலும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தனிமைப்படுத்தல் விதிகளுக்கமைய செயற்படுகின்றனவா என்பது தொடர்பில் அவதானிப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள், கொழும்பிலிருந்து பஸ்ஸில் வெளியிடங்களுக்குச் செல்பவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும்.

அத்தோடு இன்றிலிருந்து பாடசாலை பஸ் சேவையில் ஈடுபட்டுள்ள சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் உதவியாளர்களுக்கும் எழுமாற்று பரிசோதனை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் எந்தளவிற்கு பாதுகாப்பாக இருந்தாலும் சாரதிகள் அல்லது நடத்துநர்கள் சுகாதார வழிமுறைகளை முறையாகப் பின்பற்றாவிட்டால் அவர்களுக்கு கொவிட் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. எனவே தான் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது மாத்திரமின்றி பாடசாலை சேவையில் ஈடுபட்டுள்ள பஸ்களில் தனிமைப்படுத்தல் விதிமுறை பின்பற்றப்படுகின்றனவா?, மாணவர்கள் முகக்கவசம் அணிந்திருக்கின்றார்களா? என்பது தொடர்பில் அவதானிப்பதற்காக பொலிஸ் போக்குவரத்து பிரிவினரால் விசேட சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்படவுள்ளது. இவ்வாறான அனைத்து செயற்பாடுகளிலும் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். - என்றார்.

## மட்டு. காரமுனையில் சிங்களக் குடியேற்ற முயற்சி: அதிகாரிகள் துணைபோகக் கூடாது - யோகேஸ்வரன்

மட்டக்களப்பு வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காரமுனை பிரதேசத்தில் 178 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்ற முயற்சிக்கப்படுகின்ற நிலையில், அதிகாரிகள் பதவியைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத் துணைபோகக் கூடாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மீறிச் செயற்பட்டால் மக்கள் அதிகாரிகளுக்கு எதிராகக் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

காரமுனை என்கின்ற மாங்கேணி கிராம அதிகாரிக்குட்பட்ட தெற்கு பிரதேசத்தில் 178 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த மக்களைக் குடியேற்றுவதற்கான செயற்றிட்டம் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாக, அந்தப் பகுதியில் குடியிருந்த சிங்கள மக்கள் 1985 ஆம் ஆண்டு யுத்த சூழல் காரணமாக இடம்பெயர்ந்தனர் எனக் காரணம் காட்டுகின்றனர். அந்த 178 குடும்பங்களும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் இந்தப் பகுதியில் இருக்கவில்லை என்பதற்குப் பல ஆதாரங்கள் எங்களிடம் இருக்கின்றன.

இந்த 178 குடும்பங்களும் குடியேறி 1985 வெளியேறியிருப்பார்களானால் அவர்கள் 1981 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் அதனைக் கொடுப்பது நியாயமானது. சிங்கள மக்கள் இருந்த இடத்தில் அதைக் கொடுப்பதற்குத் தடையில்லை.

ஆனால், பிழையான முறையில் குடியேற்றுவதை நாங்கள் எதிர்க்கின்றோம். 1985 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் உதவி அரசாங்க அதிபராக இருந்த வாகரைப் பிரதேசம், மாவட்டச் செயலகம், கச்சேரி ஆகியவற்றில் அவர்கள் இருந்ததற்கான ஆதாரம் இருக்கும்.

178 குடும்பம் என்பது பெரிய கிராமமாக இருக்கும் நிலையில், அங்கு பௌத்த விகாரை இருந்திருக்கும், பாடசாலை போன்ற பல கட்டடங்கள் இருந்திருக்கும், அந்தப்பகுதி மாணவர்கள் எந்தப் பாடசாலையில் கல்வி கற்றார்கள், பிறப்புச் சான்றிதழ் பத்திரம் என சரியான முறையில் ஆவணங்கள் காட்டப்பட வேண்டும்.

இதேவேளை, காணிச் சட்டத்தில் குடியேற்றப்பட்டவர்களுக்கு இரண்டு ஏக்கர் காணி வழங்கப்பட்ட நிலையில், இந்த 178 குடும்பங்களுக்கு ஐந்து ஏக்கர் காணி வழங்கப்படப் போகின்றது. அதற்கான அனுமதிப்பத்திரம் அவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

இது, முழுக்கமுழுக்கப் பொய்யான சட்டவிரோதமான நடவடிக்கை. இந்தக் காணி அனுமதிப்பத்திரம் யார் தயாரித்தாரோ அவருக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்தத் திட்டமிட்ட வகையிலான குடியேற்ற நடவடிக்கைக்கு சில தமிழ் அதிகாரிகள் துணைபோயுள்ளனர். இந்தப் போலிச் செயற்பாட்டை நிறுத்தி வைக்க நீதிமன்றத்தை நாடவுள்ளேன்.

இதேவேளை, அம்பாறையின் பொத்துவிலில் உள்ள கனகர் கிராமத்தில் நீண்டகாலமாக வாழ்ந்த, யுத்தத்தால் வெளியேறிய சுமார் 300 குடும்பங்கள் இன்றுவரை குடியேற்றப்படவில்லை.

இதனைவிட, கெவிலியாமடுவில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணியை ஊர்காவல் படையினரை வைத்து பயிர்ச்செய்கை என்ற போர்வையில் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு மயிலத்தனைமடு மேய்ச்சல் தரையும் சிங்கள மக்களைக் குடியேற்றத் திட்டமிடப்படுகிறது.



புனானையில் பௌத்த மத்திய நிலையம் அமைக்கவேண்டும் என திம்புலாகல தேரர் 50 ஏக்கர் காணியை வாகரை பிரதேச செயலாளரிடம் கோரிக் கொண்டிருக்கின்றார். இவற்றுக்கெல்லாம் காரணம் மட்டக்களப்பு வனப் பரிபாலனசபையே.

சிறுதுண்டுக் காணியைத் தமிழ் மக்கள் பிடித்தால் உடனடியாக சட்டத்தை நாடுகின்றனர். ஆனால், காரமுனையில் 178 குடும்பங்களுக்கும் காணிவழங்க இங்கு இருக்கின்ற சிங்கள அதிகாரி பூரண ஆதரவை வழங்கியுள்ளார். - என்று குறிப்பிட்டுள்ளார்.

# மட்டு. வாவியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு!



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பின்பகுதி வாவிக்கரை முதலாம் வீதி வாவியில் அடையாளம் காணப்படாத ஆண் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீதியின் வாவியில் சடலம் ஒன்று கிடப்பதாக பொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் இரவு 7 மணியளவில் சென்று சடலத்தை பார்வையிட்டுள்ளதுடன் சடலம் அடையாளம் காணப்படவில்லை.

எனவே இவர் தொடர்பாக அடையாளம் தெரிந்தவர்கள் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

# ஓட்டோ விபத்து; இளைஞன் சாவு!



குருநாகல் ஹெட்டிபொல - நிகவெரடிய பிரதான வீதியில் அதிக வேகத்தில் பயணித்த ஓட்டோ வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மின்சார கம்பத்தில் மோதியதில் அதன் சாரதி உயிரிழந்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாகத் செய்தியாளர் தெரிவித்தார்.

பன்னல பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய மொஹமட் நசுருதீன் என்ற இளைஞனே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து அருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கெமராவில் இவ்வாறு பதிவாகியிருந்தது.

# தொழிலாளரின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வின்றேல் தோட்டப் பகுதியில் அசாதாரண நிலைமை ஏற்படும்!

## இராதாகிருஷ்ணன் எச்சரிக்கை

காலம் தாழ்த்தாது சம்பள பிரச்சினைக்குத் தீர்வு காண உடனடியாக அரசாங்கம் நிபுணர் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணப் படாவிட்டால் பெருந்தோட்டப் பகுதிகளில் அசாதாரண நிலைமை ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினை தொடர்ந்தும் இழுபறி நிலையில் இருக்குமாக இருந்தால் அது அரசாங்கத்திற்கும் தொழிலாளர்களுக்கும் பாரிய பிரச்சினையை ஏற்படுத்தும். எனவே, அரசாங்கம் நிபுணர் குழு ஒன்றை அமைத்து உடனடி தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் –

நடைபெற்ற சம்பள பேச்சிலும் எந்தவிதமான தீர்க்கமான முடிவும் எட்டப்படாமல் பேச்சு நிறைவடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. தோட்ட கம்பனிகள் 1,000 ரூபா அடிப்படை சம்பளம் என்ற விடயத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து வருகின்றன எனத் தெரியவருகின்றது.

இவ்வாறான ஒரு நிலையில் தொடர்ந்தும் இந்த நிலையை முன்கொண்டு செல்ல முடியாது. எனவே, இதற்கு உடனடியாக அராசாங்கம் நிபுணர் குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

அந்த நிபுணர் குழுவில் கம்பனிகள் சார்பாகவும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்ற தொழிற்சங்கங்கள் ஏனைய தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றவர்கள் சார்பாகவும் பொருளாதார துறை சார்ந்த நிபுணர்கள் தோட்ட தொழிலாளர்கள் சார்பாக ஒரு பெண் உட்பட மூவரும் அரசாங்கத்தின் சார்பாகவும் இந்த குழுவில் அங்கத்துவம் வகிக்கின்ற வகையில் அந்த குழுவை ஏற்படுத்த வேண்டும்.

அவர்களுக்கு ஒரு குறுகிய கால இடைவெளியை கொடுத்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்க உத்தரவிட வேண்டும். அப்படி செய்கின்ற நிலையில் தோட்டக் கம்பனிகளின் உண்மையான நிலைமை வெளிவரும். அவர்கள் கூறுகின்றமை போல தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றனவா? அல்லது இலாபத்தில் இயங்குகின்றனவா? என்ற கேள்விக்கு தெளிவான விடை கிடைக்கும்.

அந்த விடையைக் கொண்டு தொழிலார்களின் கருத்துக்கள், கைச்சாத்திடுகின்ற தொழிற்சங்கங்களின் கருத்துக்கள், அரசாங்கத்தின் நிலைப்பாடு, சம்பள நிர்ணய சபையின் நிலைப்பாடு நாட்டில், இருக்கின்ற பொருளாதார சூழ்நிலை இவை அனைத்திலும் கவனம் செலுத்தி 1,000 ரூபா அடிப்படை சம்பளம் என்ற விடயத்திற்கு ஒரு தீர்மானத்துக்கு வர முடியும். மேலும் இந்த பேச்சுகள் அனைத்தும் வெளிப்படைத் தன்மை கொண்டனவாக அமைய வேண்டும்.

இந்த பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படாவிட்டால் இது தொழிலாளர்களையும் தோட்டக் கம்பனிகளையும் அரசாங்கத்தையும் பாதிக்கின்ற ஒரு செயலாக மாறிவிடும். ஏனெனில் சர்வதேச சந்தையில் எங்களுடைய தேயிலைக்கு இருக்கின்ற கேள்வி குறைவடையலாம்.

எங்களுடைய தேயிலையை இறக்குமதி செய்கின்ற நாடுகளில் தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படாவிட்டால் பல நாடுகளில் தேயிலை இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

இதன் மூலமாக எங்களுடைய நாட்டின் அந்நிய செலவாணியில் சிக்கலான ஒரு நிலைமை ஏற்படலாம். இன்றைய கொரோனாத் தொற்று நோய் காரணமாக பின்டைந்துள்ள எமது பொருளாதாரம் இன்னும் பின்னடைவை சந்திக்க வாய்ப்பு உண்டு. அதே நேரம் தொழிலாளர்களும் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படுவார்கள். உற்பத்தியில் பாதிப்பு ஏற்படுத்தும். அது பெருந்தோட்ட கம்பனிகளையும் பாதிப்படைய செய்யும்.

எனவே, இந்த விடயங்கள் அனைத்தையும் அரசாங்கம் கருத்தில் கொண்டு அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கியதாக நிபுணர் குழு ஒன்றை அமைத்து உடனடி தீர்வை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் பெருந்தோட்ட பகுதிகளில் அசாதாரண சூழ்நிலை ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

அனைத்து தொழிலாளர்களும் ஒற்றுமையாக இருக்கின்றார்கள் என்பதையும் தொழிற்சங்கங்கள் ஒற்றுமையாக செயற்படுகின்றன என்பதையும் கடந்த ஒரு நாள் வேலை நிறுத்தம் அனைவருக்கும் புரிய வைத்துள்ளது என்பதையும் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். - என்றார்.

# கிளிநொச்சி ஆடைத்தொழிற்சாலையில் சிலருக்குக் கொரோனாத் தொற்று உறுதி!

கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கிவரும் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்கள் சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுடன் பணியாற்றிய ஏனைய ஊழியர்கள் நேற்று (திங்கட்கிழமை) கடமைக்குச் சென்ற நிலையில், அவர்கள் தமது அச்சத்தை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் அதனைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாத குறித்த ஆடைத் தொழிற்சாலையின் நிர்வாகம் தொடர்ந்தும் அவர்களை சேவையாற்றுமாறு வற்புறுத்தியுள்ளனர். இதனால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பாக அங்கு சென்ற கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுரைகளை வழங்கியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்த நிலையில் குறித்த ஆடைத் தொழிற்சாலையில் பல்வேறு பிரதேசங்களிலிருந்து பலரும் தொழிலுக்காகச் செல்கின்றனர்.

இதனால் மாவட்டத்தின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தொழிற்சாலை நிர்வாகம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்ற கோரிக்கை பொது அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, இந்த ஆடைத் தொழிற்சாலைக்கு வெளி மாவட்டங்களிலிருந்து உயர் பதவிநிலை ஊழியர்கள் வருகை தருகின்றமையால் ஆபத்தான நிலை காணப்படுவதாகவும் பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதற்கு அமைவாக சம்பந்தப்பட்டவர்களும் சுகாதார துறையினரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# சிரச நிறுவனத்துக்கு எதிரான தடை உத்தரவு மேலும் நீடிப்பு

கொழும்பு, ஜன. 09

ஜோர்ஜ் ஸ்டுவர்ட் ஹெல்த் நிறுவனம் மற்றும் அதன் தலைவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செய்திகளை ஒளிபரப்புவதை தடுத்து சிரச நியூஸ் பெஸ்ட் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான எம்.ரிவி தனியார் நிறுவனத்துக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவைத் தொடர்ந்தும் நீடிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக மாவட்ட நீதிவான் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி வரையில் இந்தத் தடையுத்தரவை நீடித்து நீதிவான் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வாகனங்கள் மோசடி குற்றம் 26 வயது இளைஞன் கைது!

போலியான ஆவணங்களை தயாரித்த நபரொருவர் கடுவலை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மிரிஹான விசேட விசாரணை பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

26 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வாகனங்களின் இலக்கத்தகடுகளை அகற்றி வேறு நபர்களுக்கு விற்பனை செய்யும் மோசடியில் இந்த நபர் ஈடுபட்டு வந்துள்ளார் என பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.






# தினம் ஒரு விவசாயத் தகவல்

## பார்த்தீனியம் பரவாது தடுக்கும் முறைகள்



**பூக்கள் உக்கல் உள்ள பார்த்தீனியச் செடிகளை வேறு இடத்திற்கு எடுத்துச்செல்வதை தவிர்த்தல் வேண்டும். பார்த்தீனியச் செடிகள் பரவியுள்ள இடங்களில் இருந்து மண்ணையோ கற்களையோ வேறொரு இடத்திற்கு எடுத்துச்செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.பார்த்தீனியம் பரவியுள்ள இடங்களில் கால்நடைகள் மேய்வதை தவிர்ப்பதோடு பச்சை சாணங்களை பயிர் செய்கை நிலத்திற்கு இடுவதை தவிர்த்து கூட்டுஎருவாக பயன்படுத்துவதும் விரும்பத்தக்கது.**

**பார்த்தீனியம் உள்ள இடங்களில் பாவிக்கப்பட்ட மண் வெட்டி போன்ற உபகரணங்களையும் உழுவதற்கு பயன் படுத்தப்பட்ட உழவு இயந்திரங்களின் சில்லுகளையும் கலப்பைகளையும் வாழையிலைகள், சருகுகளின் மேல் ஏற்றிவைத்து கழுவி சுத்தம் செய்த பின்னர் இலைகளை எரித்துவிடல் வேண்டும்.பார்த்தீனியத்தைக் களைவதற்கு பயன்படுத்திய கையுறைகளையும் பரவியுள்ள இடங்களில் பாவித்த காலணிகளையும் புறம்போக்கான இடங்களில் வைத்து துப்பரவு செய்வதோடு பின்னர் அவ்விடத்தில் முளைக்கும் பார்த்தீனியக் களைகளைப் பிடுங்கி எரித்தலும் அவசியமாகும். பார்த்தீனியத்தை அழிக்கத்தவறுவது தண்டனைக்குரிய குற்றம்.**

**ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி**



ஐ.நா. கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில்

# எரியும் தீயில் எண்ணெயை ஊற்றுவது போல் அரசுக்கு எதிராக வடக்கு, கிழக்கில் போராட்டம்

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கவலை

கொழும்பு, ஜன.08

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், எரியும் தீயில் எண்ணெயை ஊற்றுவது போல் இலங்கை அரசுக்கு எதிராகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி சில தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டது.

- இவ்வாறு கவலையுடன் தெரிவித்தார் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா.

தமிழ்பேசும் மக்கள் மீதான இலங்கை அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும் சர்வதேசத்திடம் நீதி கோரியும் கடந்த 3ஆம் திகதி முதல் நேற்று 7ஆம் திகதி வரை பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. இதில் பல பத்தாயிரம் தமிழ்பேசும் மக்கள் பங்கேற்று தங்கள் உணர்வலைகளை வெளிப்படுத்தினர்.

இந்தப் போராட்டப் பேரணி குறித்து தொலைக்காட்சி ஒன்றுக்கு இராணுவத் தளபதி இன்று வழங்கிய செவ்வியின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டே, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த சில நாள்களாக நடைபெற்ற பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் நடைபெற்ற இவ்வாறான போராட்டங்கள் ஒரு சில தரப்பினரின் குறுகிய நோக்கத்துக்காகவே ஏற்பாடு செய்யப்பட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், எரியும் தீயில் எண்ணையை ஊற்றுவது போல் இலங்கை அரசுக்கு எதிராக இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதால் இது போன்ற போராட்டங்கள் - பேரணிகள் - ஆர்ப்பாட்டங்கள் அனுமதிக்கப்படுகின்றன.

இருப்பினும் கொரோனா வைரஸ் தொற்றின் தற்போதைய நிலையைக் கருத்தில்கொண்டு சுகாதார நடைமுறைகளை மீறியவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

# ஐ.நாவில் இலங்கை மீதான நடவடிக்கைக்கு கனடா மீண்டும் தலைமையேற்க வேண்டும்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து



இலங்கை விவகாரம் தொடர்பாக ஐ.நாவில் கனடா தலைமைத்துவம் வழங்குவது மீண்டும் தேவையாக உள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் அமைப்பின் கனடாவுக்கான இயக்குநர் பரீடா டெய்வ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போருக்குப் பின்னர் நல்லிணக்கத்தையும் நீதியையும் ஏற்படுத்துவதற்கான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் முக்கிய பங்களிப்பு செய்த நாடுகளில் ஒன்றாகக் கனடா காணபட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை நிலைவரம் மீண்டும் மோசமடைகின்றது எனவும், இராஜதந்திர நடவடிக்கைகளை எடுப்பதற்கான செயற்பாடுகளைத் தீவிரப்படுத்துவது குறித்து கனடா கவனம் செலுத்துவது முக்கியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையை அதன் தற்போதைய பாதையில் செல்ல அனுமதிப்பதா அல்லது பாதிக்கப்படக்கூடிய இலங்கையர்களைப் பாதுகாத்து, சர்வதேச சட்டத்தை நிலை நிறுத்துவதா என்ற முக்கிய கேள்வியுடன் இம்முறை மனித உரிமைகள் சபையின் அமர்வு ஆரம்பமாகின்றது எனவும் பரீடா டெய்வ் கூறியுள்ளார்.

இந்த முயற்சிகளுக்குத் தலைமை தாங்கக்கூடிய இடத்தில் கனடா இருக்கின்றது எனவும், சர்வதேச குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை தீவிரப்படுத்துவது பயங்கரங்களைத் தடுத்து நிறுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி

# சர்வதேச மட்டத்தில் ராஜபக்ஷ அரசை நெருக்கடிக்குள் தள்ளும் சதி முயற்சி

## பதறுகின்றார் அமைச்சர் கம்மன்பில



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையில் இடம் பெற்ற பேரணி ராஜபக்ஷ அரசை சர்வதேச மட்டத்தில் நெருக்கடிக்குள் தள்ளும் சதி முயற்சி என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தமிழ்பேசும் மக்களின் நீதிக்கான பேரணி தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் ஆட்சியை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்ட தாகவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளிட்ட மனித உரிமை சபையின் உறுப்பினர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அரசின் ஒருசில துறைகளுக்கு இராணுவ அதிகாரிகளை நியமித்துள்ளமையே இவர்களின் பிரச்சினையாக உள்ளது.


எனினும், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை சிவில் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது மற்றும் தகுதியான இரா ணுவத்தினரை உரிய துறைகளில் ஈடுபடுத்தி பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பன எந்த விதத்திலும் தவறான நகர்வுகள் அல்ல.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையா ளரின் அறிக்கையை அரசு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இதனை எழுத்து மூலம் அனுப்பியுள்ளோம்.

இதேவேளை, ஆணையாளரின் அறிக்கையை அரசு ஆதரிப்பதாகக் கூறும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நாம் பொறுப்பு இல்லை. - என்றார்.

# உங்கள் அதிகாரப் பசி ஆட்சி மக்களின் சக்தியால் அழியும்

## கோட்டாபயவுக்கு பொன்சேகா எச்சரிக்கை



எதிரிக்கு முன்னால் திறந்த வெளியைக் கடப்பது ஆபத்தானது என்பதை நான் மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நினைவுபடுத்துகின்றேன்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தனது சமூக வலைத்தள பதிவில் ஜனாதிபதிக்கு எச்சரிக்கைவிடுத்து குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1991 இல் யாழ்ப்பாணக் கோட்டையைக் காப்பாற்றுவதற்கான போரில், நீங்கள் எதிரிக்கு முன்னால் நிறுத்தப்பட்டு திறந்த வெளியைக் கடந்து ஆபத்தில் சிக்கியபோது, உங்களையும் உங்கள் படையணியையும் நான் உட்பட முதலாவது சிங்கப் படைப்பிரிவினர் காப்பாற்றினோம்.

இன்று, 30 ஆண்டுகளுக்குப் பின்னர், 2021 இல், அரசியல் அரங்கில், நீங்கள் மீண்டும் அதே தவறைச் செய்ய மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

உங்கள் முகாமின் கட்டளையும் கட்டுப்பாடும் உடைந்துவிட்டது என்பது இப்போது தெளிவாகத் தெரிகின்றது. உங்களுக்கு வாக்களித்த 69 லட்சம் மக்களைக் கேலி செய்வதன் மூலம், நீங்கள் அரசியல் ரீதியாகத்

தனிமைப்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது. உங்கள் அதிகாரப் பசி ஆட்சி உங்களை ஆட்சிப்பீடம் ஏற்றிய மக்கள் சக்தியால்



அழிக்கப்படும்.

எனவே, கோட்டாபயவுக்கு எனது அறிவுரை என்னவென்றால், நாடு உட்பட பெரும் நெருக்கடியில் இருக்கும் நேரத்தில், நான் உட்பட பொது எதிர்க்கட்சியின் அரசியல் தலைவர்கள் மற்றும் நண்பர்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கக் கூடாது. மேலும், இது பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகளை அதிகரிக்கும் - என்றுள்ளது.

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா இம் மாதம் 24, 25 ஆம் திகதிகளில் இரண்டு நாள்கள்; ஆறு அமர்வுகளில் 2 ஆயிரத்து 608 பேருக்குப் பட்டங்கள்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா இம்மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இரண்டு நாள்களிலும், ஆறு அமர்வுகளாக நடாத்தத் திட்டமிடப் பட்டுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் உயர் பட்டப்படிப்புகள், உள்வாரி, வெளிவாரி என 2 ஆயிரத்து 608 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர் என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ள விபரங்கள் வருமாறு:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாதலைமையில், யாழ். பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதன் முன்னிலையில் எதிர்வரும்; 24 ஆம், 25 ஆம் திகதிகளில் புதிதாக அமைக்கப் பட்ட உள்ளக விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளது. பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதன் பட்டதாரிகளுக்கான பட்டங்களை வழங்கவுள்ளார். இரண்டு நாள்கள் - ஆறு அமர்வுகளாக இந்தப் பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது.

முதலாம் நாளான 24 ஆம் திகதி, புதன்கிழமை ஆயிரத்து 388 பேருக்குப் பட்டங்களும், டிப்ளோமாக்களும் வழங்கப் படவுள்ளன.

காலை 8.30 மணி முதல் 11 மணி வரை நடைபெறவுள்ள முதலாவது அமர்வில், நிதி முகாமைத்துவத்தில் கலாநிதி பட்டம், விவசாய உயிரியலில் முது தத்துவமாணி, விவசாய இரசாயனத்தில் முது தத்துவமாணி, சைவ சித்தாந்தத்தில் முது கலைமாணி ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா ஒவ்வொருவரும், வியாபார நிருவாக முதுமாணிப் பட்டத்தினை 55 பேரும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டத்தை 52 பேரும், கலைமாணி (விசேட பகுதி) பட்டத்தை 160 பேரும், வணிகமாணி பட்டத்தை 88 பேரும், தாதியியல் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டத்தை 09 பேரும், மருந்தகவியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தை 14 பேரும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தை 21 பேரும் பெறவிருக்கின்றனர்.

இவற்றுடன், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரி பட்டங்களைப் பெறுபவர்களில் 114 கலைமாணி பட்டதாரிகளதும் 2 நடனமாணி பட்டதாரிகளதும் பெயர்கள் வாசிக்கப்பட்டு அவர்களின் பட்டங்கள் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

முற்பகல் 11.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை நடைபெறவுள்ள இரண்டாவது அமர்வில், இந்து நாகரிகத்தில் கலாநிதி பட்டம், கல்வியியலில் முது தத்துவமாணி, வரலாற்றில் முது தத்துவமாணி, கிறிஸ்தவ நாகரிகத்தில் முது தத்துவமாணி ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா ஒவ்வொருவரும், கல்வியியலில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா தகைமையினை 66 பேரும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், கலைமாணி (விசேட பகுதி) பட்டத்தை 168 பேரும், வியாபார நிருவாகமாணி (சிறப்பு) பட்டத்தை 22 பேரும், கலைமாணி (நடனம்) பட்டத்தை 50 பேரும், கலைமாணி (வாய்ப்பாட்டு) பட்டத்தை 77 பேரும், கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) பட்டத்தை 22 பேரும் பெறவிருக்கின்றனர்.

இவற்றுடன், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரி பட்டங்களைப் பெறுபவர்களில் 7 வணிகமாணி (பழைய பாடத்திட்டம்) பட்டதாரிகளதும், 16 வணிகமாணி (புதிய பாடத்திட்டம்) பட்டதாரிகளதும், 36 வியாபார முகாமைத்துவமாணி பட்டதாரிகளதும் பெயர்கள் வாசிக்கப்பட்டு அவர்களின் பட்டங்கள் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

பிற்பகல் 2.30 மணி முதல் பிற்பகல் 4.30 வரை நடைபெறவுள்ள மூன்றாவது அமர்வில், மனித வள முகாமைத்துவத்தில் கலாநிதி பட்டம், புவியியலில் முது தத்துவமாணி ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா இருவரும், பௌதிகவியலில் முது தத்துவமாணி, மண் விஞ்ஞானத்தில் முது தத்துவமாணி ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா ஒவ்வொருவரும், ஆங்கிலம் - இரண்டாம் மொழியாக கற்பித்தலில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா தகைமையினை 18 பேரும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், வியாபார நிருவாக மாணி பட்டத்தை 259 பேரும், சட்டமாணி பட்டத்தை 49 பேரும், தாதியியல் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டத்தை 22 பேரும், மருந்தகவியல் விஞ்ஞான மாணி சிறப்புப் பட்டத்தை 21 பேரும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தை 26 பேரும் பெறவிருக்கின்றனர்.

இரண்டாம் நாளான 25 ஆம் திகதி, வியாழக்;கிழமை ஆயிரத்து 220 பேருக்குப் பட்டங்களும், டிப்ளோமாக்களும் வழங்கப்படவுள்ளன.

காலை 8.30 மணி முதல் 11 மணி வரை நடைபெறவுள்ள 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் நான்காவது அமர்வில் தமிழில் கலாநிதி பட்டம், மெய்யியலில் முது தத்துவமாணி, அரசியல் விஞ்ஞானத்தில் முது தத்துவமாணி ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா ஒவ்வொருவரும், கல்வியியலில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா தகைமையினை 77 பேரும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், வைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணி பட்டத்தை 118 பேரும், மருத்துவ விஞ்ஞானமானி பட்டத்தை ஒருவரும், சித்த வைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணி பட்டத்தை 70 பேரும், பொதுக் கலைமாணி பட்டத்தை 127 பேரும், பொதுக் கலைமாணி (ஆளில்லா நிலையில்) பட்டத்தை ஒருவரும் பெறவுள்ளனர்.

இவற்றுடன், வியாபார நிருவாக டிப்ளோமா தகைமை பெறும் ஒருவரதும், நுண் நிதியியலில் டிப்ளோமா தகைமை பெறும் 25 பேரதும் உடற்கல்வி டிப்ளோமா தகைமை பெறும் ஒருவரதும், பெயர்கள் வாசிக்கப்பட்டு அவர்களின் தகைமைகள் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

முற்பகல் 11.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை நடைபெறவுள்ள ஐந்தாவது அமர்வில், சந்தைப்படுத்தலில் கலாநிதி பட்டம் ஒருவரும், சித்த வைத்தியத்தில் முது தத்துவமாணி பட்டம், தமிழில் முது தத்துவமாணி பட்டம் ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா இருவரும், கல்வியியலில் முதுமாணி பட்டத்தை 98 பேறும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், விவசாய விஞ்ஞான மாணி பட்டத்தை 62 பேரும், கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (4 ஆண்டுகள்) பட்டத்தை 03 பேரும், கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான மாணி (3 ஆண்டுகள்) பட்டத்தை ஒருவரும், கணினி விஞ்ஞானமாணி பட்டத்தை 02 பேரும், பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 10 பேரும், விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 106 பேரும், கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தை 18 பேரும், விஞ்ஞானமாணி (பொது) பட்டத்தை 98 பேரும் பெறவுள்ளனர்.

பிற்பகல் 2.30 மணி முதல் பிற்பகல் 4.30 வரை நடைபெறவுள்ள ஆறாவது அமர்வில், புவியியலில் கலாநிதி, பொருளியலில் முது தத்துவமாணி பட்டம் ஆகிய உயர் பட்டத் தகைமைகளைத் தலா ஒவ்வொருவரும், கல்வியியலில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா தகைமையினை 25 பேரும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தை 26 பேரும், பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 33 பேரும், விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 91 பேரும் பெறவுள்ளனர்.

இவற்றுடன், வவுனியா வளாகத்தின் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பமாணி (பொது) பட்டத்தை 25 பேரும், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 14 பேரும், சுற்றுச் சூழலியல் விஞ்ஞான மாணி (பொது) பட்டத்தை 15 பேரும், சுற்றுச் சூழலியல் விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டத்தை 09 பேரும், விஞ்ஞான மாணி ( பிரயோக கணிதம், கணினி) பொதுப் பட்டத்தை 22 பேரும், கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தை 04 பேரும், வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு) பட்டத்தை 52 பேரும், திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி (பொது) பட்டத்தை 35 பேரும், வியாபார முகாமைத்துவ மாணி (பொது) பட்டத்தை 26 பேரும் பெறவிருக்கின்றனர்.



# 90 லட்சம் மக்களுக்கு செலுத்தும் வகையில் 18 மில்லியன் டோஸ் தடுப்பூசி இலங்கைக்கு!

9 லட்சம் மக்களுக்கு செலுத் தும் வகையில் 18 மில்லியன் டோஸ் கொரோனாத் தடுப்பூசி அரசாங்கத்தால் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கோவக்ஸ் திட்டத்தின் மூலம் முதல் தொகுதி தடுப்பூசிகள் பெப்ரவரி இறுதிக்குள் இலங்கையை வந்தடையும் என பொது சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மார்ச் முதலாம் திகதி தொடக்கம் நாடளாவிய ரீதியில் 4,000 மத்திய நிலையங்களில் தடுப்பூசியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொரோனா ஒழிப்பு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர், 30 தொடக்கம் 60 வயதுக்கிடைப்பட்ட தொழில் செய்யும் அனைத்து பிரஜைகளுக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அந்தவகையில் நாடுமுழுவதும் அமைக்கப்படும் ஒவ்வொரு தடுப்பூசி மத்திய நிலையம் ஊடக தினமும் 300 பேருக்கு தடுப்பூசி போடப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## கொரோனா குணமடைவு 64 ஆயிரம் தாண்டியது!

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 740 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 64 ஆயிரத்து 141 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 69 ஆயிரத்து 348 ஆக காணப்படுகின்றது.

இதில் 4 ஆயிரத்து 851 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை 720 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனாத் தொற்றால் இதுவரை 356 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தொற்று பதுளையில் அதிகரிப்பு!

### நால்வர் சாவு

பதுளை மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றமையுடன், அங்கு இதுவரையில் கொரோனாத் தொற்றால் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

குறிப்பாக கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் அங்கு 197 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி முதல் இதுவரையில் பதுளை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மொத்தமாக 584 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளனர் என பதுளை மாவட்ட கொவிட் - 19 தடுப்பு செயலணியினர் தெரிவித்துள்ளனர்.

பதுளையில் ஐந்து கொரோனாத் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளமையோடு, பசறை, பண்டாரவளை, தியத்தலாவை, ரிதிமாலியத்தை, மகியங்கனை, வெலிமடை போன்ற இடங்களில் ஏனைய கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

வெலிமடையில் ஒருவர் தியத்தலாவையில் இருவர், மகியங்கனையில் ஒருவர் உள்ளிட்ட நான்கு பேர், கொரோனா தொற்றால் மரணமாகியுள்ளனர்.

அத்தோடு கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மகியங்கனைப் பகுதியில் இரு ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இவ்விரு ஆடைத் தொழிற்சாலைகளில் சுமார் 185 பேர் வரை கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் பதுளை மாவட்ட கொவிட் 19 தடுப்பு செயலணியினர் தெரிவித்தனர். அத்துடன் பதுளை மாவட்டத்தில் 617 பேர் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தோட்டப் பகுதி தமிழ்ப் பாடசாலைகளில் உயர்தர சித்தியுடன் ஆசிரியராக வாய்ப்பு!

தோட்ட பகுதிகளிலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவுகின்ற ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் வெற்றிடங்களுக்கு க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசேட கவனம் செலுத்தினார்.

கேகாலையில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்தார். அனைத்து பாடசாலைகளின் கணினி தேவைகளையும் ஆராய்ந்து பூர்த்தி செய்யுமாறும் ஜனாதிபதி இதன்போது அறிவுறுத்தினார்.

மேலும் நாடு முழுவதும் கிராமப்புற தோட்டங்களை அண்மித்த சிறிய உள்நுழைவு வீதிகள் மற்றும் சிறிய வீதிகளை இணைக்கும் வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை கூறிய ஜனாதிபதி இனிமேல், அனைத்து நிர்மாணப் பணிகளும் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளின் மேற்பார்வையில் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

கோகாலை மாவட்டத்தில் உள்ள கிராமப்புற வைத்தியசாலைகளில் உள்ள மருத்துவர் மற்றும் ஏனைய ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்பவும் இப்பகுதியிலுள்ள காணிப் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார்.

## இலங்கையில் 103 வயது பெண் கொரோனாத் தொற்றால் சாவு!

இலங்கையில் 103 வயது பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

காலி மாவட்டம், கிரிமங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணே கடந்த 06ஆம் திகதி அவரது வீட்டிலேயே உயிரிழந்துள்ளார்.

அதன்பின்னர் அவரது சடலம் கராபிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டுச் செல்லப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது, அவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி இருந்தமை தெரிய வந்துள்ளது எனக் காலி மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரியந்த டி சில்வா தெரிவித்தார். நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்த அதிக வயதுடையவர் குறித்த பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெரும் குழப்பத்தை ஏற்படுத்திய மஹேல, சங்கக்கார செயற்பாடு

நான் அமைச்சராக இருந்தவேளை என்னுடன் இணைந்து செயற்பட மறுத்த மஹேல ஜெயவர்தன மற்றும் சங்கக்கார இருவரும் தற்போது அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படுகின்றமை தனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நான் அமைச்சராக இருந்தவேளை ஸ்ரீலங்கா கிரிக்கெட் தொடர்பான விடயங்களில் இருவரும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள மறுத்தனர் என ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஆனால் தற்போது இருவரும் கிரிக்கெட்டிலும் ஏனைய விளையாட்டுகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர் எனத் தெரிவித்த அமைச்சர், இது எனக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

நான் அவர்களை ஸ்ரீலங்கா கிரிக்கெட்டிற்கு பங்களிப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டேன். நான் அவர்களின் பங்களிப்பை பெறுவது குறித்து உறுதியாக இருந்தேன். நான் அவர்களை எனது வீட்டில் சந்தித்தேன். அவர்கள் அந்த நேரத்தில் அதற்கு இணங்கவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்த அரசாங்கம் பலவீனமான நிலையிலிருந்தது. அவர்கள் சர்ச்சையில் சிக்க விரும்பாமலிருந்திருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் அமைப்புமுறை மீது தங்களுக்கு நம்பிக்கையில்லை எனத் தெரிவித்தார்கள் எனவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1980.04.07
மதம் - இந்து V
நட்சத்திரம் - மூலம்
செவ் - -----
பாவம் - 72 1/2
கல்வி - A/L
தொழில் - கனடா PR
எதிர்பார்ப்பு - கனடா வரவிரும்பும் பெண்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1989.09.25
மதம் - இந்து V
நட்சத்திரம் - ஆயிலியம்
செவ் - ------
பாவம் - 15 3/4
கல்வி - Engineering
தொழில் - ஆஸ்திரேலியா PR
எதிர்பார்ப்பு - ஆஸ்திரேலியா வர விரும்புபவர்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

Anna EXPRESS Courier Services
அன்னா விரைவும் பொதிகள் சேவை
077 8889388
075 3305500
070 3305500
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.02.2021 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாத் தனிமைப்படுத்தல் காலத்தை குறைக்க நடவடிக்கை!

## சுதத் சமரவீர தெரிவிப்பு



கொரோனாத் தொற்றாளர்களுக்கான தனிமைப்படுத்தல் காலத்தை குறைப்பதற்கு சுகாதார பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது என தொற்றுநோய் ஆய்வு பிரிவின் பிரதானி விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அதன் பிரகாரம் இதுவரை காலமும் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் தங்கியிருக்க வேண்டும் என்ற நிலையை 10 நாள்களுக்கு குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிகின்றது.

இவ்வாறு 10 நாள்களுக்கு தனிமைப்படுத்தல் காலம் குறைக்கப்படுவது, நோய் அறிகுறிகள் வெளிக்காட்டாத வைரஸ் தொற்றுக்குள்ளாகுபவர்களின் தனிமைப்படுத்தல் காலமாகும்.

அத்துடன் குறித்த 10 நாள்கள் கணிக்கப்படுவது, கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்படும் நபரிடமிருந்து பி.சி.ஆர். மாதிரி பெற்றுக்கொள்ளப்பட்ட தினத்தில் இருந்தாகும்.

மேலும் வைரஸ் தொற்றுக்குள்ளாகிய நபரிடமிருந்து வைரஸ் பரவும் சாத்தியம் இருப்பது ஆரம்ப 10 நாள்களாகும். அதன் பின்னர் தொற்றாளரிடமிருந்து வேறு நபர்களுக்கு பரவுவதில்லை என்பது விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஆரம்ப 10 நாள்கள் மாத்திரம் அவர்கள் சிகிச்சை மத்திய நிலையங்களில் தங்கியிருப்பதற்கும் எஞ்சிய 4 நாள்கள் அவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

# கணவனுக்கு மனைவி கத்திக் குத்து ஆபத்தில் கணவன்: மனைவி கைது!

கொழும்பு, பெப்.09

கணவனுக்கும், மனைவிக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றவே, ஆத்திரம் கொண்ட மனைவி, மரக்கறி வகைகள் வெட்டும் கத்தியை எடுத்து தனது கணவனை பலமுறை குத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் மொனராகலைப் பகுதியின் நக்கலவத்தை என்ற இடத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

பலத்த கத்திக் குத்துக்கிலக்கான நபர், ஆபத்தான நிலையில் மொனராகலை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட மொனராகலை பொலிஸார், கத்திக் குத்துக்கிலக்கான நபரின் மனைவியைக் கைதுசெய்துள்ளதுடன், தாக்குதலுக்குப் பயன்படுத்திய இரத்தம் தோய்ந்த நிலையிலான கத்தியையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் நிறைவுற்ற பின்னர், அப்பெண் மொனராகலை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுத்தப்படுவாரென்று மொனராகலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்திக்க கமகே தெரிவித்தார்.

# இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தை திருத்த முன்மொழிவு கோரியது வெகுசன ஊடக அமைச்சு!

இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தை திருத்தியமைப்பதற்காக ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட சிவில் பிரஜைகளின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை வெகுசன ஊடக அமைச்சு கோரியிருக்கிறது.

இது தொடர்பில் அமைச்சின் செயலாளர் நேற்று திங்கட்கிழமை விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தால் நிறுவப்பட்டுள்ள இலங்கை பத்திரிகை பேரவையை 'கட்டமைப்பு ரீதியில் மறுசீரமைத்து அச்சு, இலத்திரனியல் மற்றும் புதிய ஊடகங்களை உள்ளடக்கிய வகையில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் தொடர்பில் தீர்ப்பளிக்கும் நிறுவனமாக மீளமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.'

அதன் பொருட்டுதற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தை திருத்தியமைப்பதற்காக ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட சிவில் பிரஜைகளின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு வெகுசன ஊடக அமைச்சு உத்தேசித்துள்ளது.

எனவே, திருத்தப்படும் சட்ட வரைவில் உள்ளடக்குவதற்குப் பொருத்தமான சமகால முன்மொழிவுகளை மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்புடைய வரைவைத் தயாரிக்கும் செயற்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்காக, செயலாளர், வெகுசன ஊடக அமைச்சு, இல.163, எசிதிசி மெதுர கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு 5 எனும் முகவரிக்கு அல்லது secretary@media.gov.lk, ad.secdev.media@gmail.com, Legaldiv@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்பி வைக்க முடியும்.

# அனைத்துக் கட்சித் தலைவர்களை அவசரமாக அழைக்கின்றார் பிரதமர்!



கட்சித் தலைவர்களுடனான அவசர கூட்டத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்படி இன்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் நாடாளுமன்ற கட்டட தொகுதியில் கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் இந்த கலந்துரையாடலில் பங்கேற்குமாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ஸ 10 அரசியற் கட்சி தலைவர்களுடன் விசேட கலந்துரையாடலை முன்னெடுத்திருந்தார்.

இந்த நிலையிலேயே பிரதமர் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாதிகளின் மனித உரிமைகள் தொடர்பாகவே ஐ.நா. ஆராய்கின்றது!

## அரச தரப்பு எம்.பி. தமக்குத்தாமே ஆறுதல்

மனித உரிமைகள் பேரவை பயங்கரவாதிகளின் மனித உரிமைகள் தொடர்பாகவே ஆராய்கிறது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக்க பிரியந்த தெரிவித்துள்ளார்.

நாத்தாண்டிய பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசிய அவர் –

போரின் போது காணாமல் போன அல்லது இறந்த வீரர்களின் குடும்பங்களின் மனித உரிமைகள் தொடர்பாக ஆராயவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

உள்நாட்டு போரின்போது, தங்கள் கணவன், தந்தை மற்றும் மகன்களை இழந்தமையால் பெண்கள் கடுமையான இன்னல்களை எதிர்கொண்டனர் என அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் மனித உரிமைகள் பேரவை அவர்களைப் புறக்கணித்துவிட்டு பயங்கரவாதிகளுடன் ஒத்துப்போகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது என அசோக்க பிரியந்த கூறினார். மனித உரிமைகள் பற்றி பேசும்போது மனித உரிமைகள் ஆணையாளர் அனைத்து தரப்பினரையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு கடனுதவி வழங்க அரசு தீர்மானம்

## காமினி லொகுகே தெரிவிப்பு



தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு 4 சதவீத வட்டி அடிப்படையில் 3 லட்சம் ரூபா கடனுதவி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேச்சு ஊடாகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். அதனை விடுத்து பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதால் எவ்வித பயனும் எவருக்கும் கிடைக்காது என போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் முன்னெடுக்கவிருந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை கைவிட்டுள்ளார்கள். கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தினால் தனியார் பஸ் உரிமையாளர்கள் மாத்திரம் பாதிக்கப்படவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொண்டு அவர்கள் செயற்பட வேண்டும். இதுவரையில் முன்வைத்த கோரிக்கைகள் இயலுமான அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது. 4 வீத வட்டி அடிப்படையில் 3 லட்சம் கடனை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புகையிரத சேவையில் அதிக வெற்றிடங்கள் நிலவுகின்றதை ஏற்றுக் கொள்கிறோம். சேவை வெற்றிடம் குறித்து புகையிரத பொறுப்பதிகாரிகள் சங்கம் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவதாக குறிப்பிட்டுள்ளார்கள். இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அனைத்து தரப்பினருடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரதான நகரங்களில் உள்ள வாகன நெரிசலை கட்டுப்படுத்த புகையிரத போக்குவரத்து சேவையினை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டை தொடக்கம் அவிசாவளை வரையான களனி வழி ரயில் பாதையில் புகையிரத சேவையினை அதிகரிக்க புதிய திட்டம் செயற்படுத்தப்படும். ரயில் சேவையினை அதிக லாபமீட்டும் துறையாக அபிவிருத்தி செய்வது போக்குவரத்து அமைச்சின் பிரதான இலக்காகும்.

கொவிட் – 19 ஊடாக ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற எதிர்தரப்பினர் அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுகிறார்கள். மக்களாணைக்கு புறம்பாக அரசாங்கம் செயற்படுவதாக குறிப்பிட்ட குற்றச்சாட்டு கிழக்கு முனைய விவகாரத்தில் பொய்யாக்கப்பட்டுள்ளது. கிழக்கு முனைய விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி நாட்டு மக்கள் குறிப்பிட்ட கருத்துக்கு அமையவே தீர்மானம் எடுத்துள்ளார். மக்களாணைக்கு புறம்பாக அரசாங்கம் ஒருபோதும் செயற்படாது.

கொவிட் – 19 தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட துறைசார் தரப்பினருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. வைரஸ் தாக்கத்தில் இருந்து நாட்டு மக்களை பாதுகாக்க அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து பொறுப்புடன் செயற்பட்டுள்ளது. கொவிட் – 19 தடுப்பூசியை எதிர்வரும் மாதம் முதல் நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே அரசாங்கம் அனைத்து நெருக்கடிகளையும் சிறந்த முறையில் கையாளும் என்றார்.

# நாளாந்தம் பி.சி.ஆர் மேற்கொள்ளப்படும் 13,000 பேரில் 5.5 வீதமானோர் தொற்று

இலங்கையில் நாளாந்தம் பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தப்படும் 13,000 பேரில் 5.5 வீதமானவர்கள் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பி.சி.ஆர் சோதனைகளுடன் தொடர்புபட்ட சிரேஷ்ட மருத்துவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாளாந்தம் 12,000 முதல் 13,000 பி.சி.ஆர் துரித அன்டிஜன் பரிசோதனைகளை முன்னெடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுபவர்களில் 5.5 வீதமானவர்கள் நோயாளிகளாக அடையாளம் காணப்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் நிலைமையில் எந்த முன்னேற்றமுமில்லை எனத் தெரிவித்துள்ள மருத்துவர், ஆனால் நிலைமை கட்டுப்பாட்டை மீறிச் செல்வதை தடுப்பதற்காக அதிகாரிகள் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.